"இராணுவ தாக்குதலிலிருந்து இலங்கை தமிழர்களை காப்பாற்ற

# உடன்நடவடிக்கைவேண்டும்

விலை ரூபா 1-50

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

மலர் 29 ஆடி 2 துல்ஹஜ்ஜா 21 இதழ் 147
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18-7-1987

## பிரதமர் காந்திக்கு எம். ஜி. ஆர். அவசரக் கடிதம்

[சென்னை]

இலங்கையில் வடக்குக் கிழக்குப் பகுதியில் இராணுவம் மேற்கொண்டுவரும் மோசமான தாக்குதகளிலிருந்து தமிழர்களை காப்பாற்ற உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இந்தியப் பிரதமருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இக்கடிதத்தில் அவர்மேலும் குறிப்பிடுகையில், குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் மீண்டும் இரண்டாவது 'ஒபரேஷன் லிபரேஷன்' நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் இதில் பொதுமக்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி, முல்லைத்தீவு பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாகவும் இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## லண்டன் செய்தியாளர் யாழ். வருகை

யாழ்ப்பாணம், சனி.

பிரிட்டிஷ் பத்திரிகையான 'த ஒப்ஸேர'வரின் தென்னாசியப் பிரிவுச் செய்தியாளரான

(5-ம் பக்கம் பார்க்க)

இலங்கை இனப்பிரச்னைக்கு—

## அரசியல்தீர்வொன்றையே இந்தியா விரும்புகிறது

### — ஜனாதிபதியிடம் டிக்ஸிற்

(கொழும்பு)

"இலங்கை இனப்பிரச்னை பற்றிய விடயத்தில் அரசியல் அடிப்படையிலான தீர்வு ஒன்றினையே இந்தியா விரும்புகின்றது'' என்று இலங்கைக்கான இந்தியத்தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம்வலியுறுத்தியுள்ளார்.

இனப்பிரச்னை தீர்வு குறித்த விடயத்தில் தமிழ்ப் போராளிகளின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி தெரிந்து கொள்ளும் வகையில் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் திரு. டிக்ஸிற் அழைக்கப்பட்டு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது அப்பொழுதே திரு. டிக்ஸிற் ஜனாதிபதிக்கு இந்தியாவின் நிலைப்பாட்டை மீண்டும் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சந்திப்பின்போது ஜனாதிபதியுடன் பத்து அமைச்சர்களும் கலந்து கொண்டார்கள்.

ஜனாதிபதியுடனான இந்தப் பேச்சுக்களின் போது திரு. டிக்ஸிற் இலங்கைத் தமிழ்மக்களுக்கு ஏற்றவகையில் புதிய திட்டங்கள் அமுல் படுத்தப்படல் வேண்டும் என்று கூறியதுடன், டிசம்பர் 19- திகதிய யோசனைகள் பற்றிய இந்தியாவின் கருத்துக்களையும் தெரிவித்தார். (ரா)

● அரசு தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவில்லையாம்!

# இராணுவ, பொலிஸ் கைதிகள்

# அடையாள உண்ணாவிரதம்

## நடவடிக்கை இல்லையேல் சாகும்வரை தொடரும்

(அலுவலக நிருபர் என். கே. துரைசிங்கம்)

**தமிழீழ விடுதலைப்புலிகளால் சிறைபிடிக்கப்பட்ட, அவர்களிடம் சரணடைந்த பொலிஸ், இராணுவத்தைச் சேர்ந்த பன்னிரண்டு பேரும் அரசாங்கம் தம்மை விடுதலைசெய்விப்பதற்கு எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை யென்பதைக் கண்டித்து நேற்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.**

மேலும் தமது நிலையை சிங்கள மக்களுக்கும், அரச படைகளுக்கும் தெரியப்படுத்துவதும், தமது விடுதலைக்காக அரசாங்கம் புலிகளோடு ஒத்துழைக்க வேண்டுமென்பதும் அவர்களது இந்த உண்ணாவிரதத்தின் நோக்கமாகும்.

பண்ணைப் பொலிஸ் மினி இராணுவமுகாம் தாக்குதலின் போது புலிகளால் கைதுசெய்யப்பட்ட ஐந்து இராணுவ சிப்பாய்களும, மூன்று பொலிசாரும் பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறி புலிகளிடம் சரணடைந்த இராணுவ சிப்பாய் ஒருவரும், பண்ணைத் தொலைத்தொடர்பு தாக்குதலின்போது புலிகளால் கைது செய்யப்பட்ட மூன்று இராணுவத்தினருமே இந்த அடையாள உண்ணாவிரதத்தினை நேற்று அனுஷ்டித்தனர்.

உண்ணாவிரத முடிவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பொலிஸ்கன்ஸ்டபிள் மன்னூரில் இராணுவத்தினருடன் இடம் பெற்ற நேரடி மோதலொன்றின் போது புலிகளால் கைதுசெய்யப்பட்ட இரு இராணுவத்தினரையும் விடுதலை செய்வதற்கு அரசாங்கம் புலிகளுடன்பேச்சு நடத்தி இரண்டரை மாதங்

(5ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மனிதாபிமானத்தை அரசு உணர்ந்துகொள்ளவில்லை

யாழ்ப்பாணம், சனி

'விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் மனிதாபிமானமுள்ளவர்கள் இதனை அவர்களுடன் நாம் இருக்கும் நாட்களில் புரிந்துகொண்டுள்ளோம் ஆனால் அரசாங்கம்தான் இதனை உணர்ந்துகொள்ள வில்லை.''

இவ்வாறு யுத்தக்கைதிகள் நேற்று நடத்திய ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தின் இறுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் சிப்பாய் ஒருவர் தெரிவித்தார்.

(5ம் பக்கம் பார்க்க

## விஷேட வைத்திய சேவை

சென்னை)

மண்டபம் அகதிமுகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு கடந்த ஐந்து நாட்களாக விஷேட வைத்திய சேவை நடத்தப்பட்டு வருகிறது.

[5ம் பக்கம் பார்க்க]

## நெல்லியடி ம.ம.வி. மாணவர் அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், சனி.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய க. பொ. த உயர்தர வகுப்பு மாணவர்களின் பரீட்சை அனுமதி அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு கோப்பாய் கிறீஸ்தவக்கல்லூரி மண்டபத்தில் வைத்து வழங்கப்படும் என்று அதிபர் ஸ்ரேய் கந்தராஜா அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

## எம். ஜி. ஆர். வாழ்த்துச் செய்தி

(சென்னை)

இந்தியாவின் எட்டாவது ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள திரு. ஆர் வெங்கட்ராமனுக்கு தமிழக முதல்வர் திரு எம். ஜி இராமச்சந்திரன் தொலைபேசி மூலம் தமது வாழ்த்துச் செய்தியினைத் தெரிவித்துள்ளார்.

(5ம் பக்கம் பார்க்க)

## தடுப்புகாவலில் உள்ளவர்களை பார்க்க அனுமதிக்கடிதம்

யாழ்ப்பாணம் சனி

பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகாலச்சட்டம் ஆகியவற்றின்கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை அவர்களது உறவினர்கள் சென்று பார்ப்பதற்கு யாழ். அரசாங்கசெயலகத்தில் அனுமதிக்கடிதம் வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக யாழ் அரசாங்க அதிபர் கீழ்க்காணும் அறிவித்தலொன்றை வெளியிட்டுள்ளார்.

பூஸா காலி; வெலிகடை, பேலவத்தை ஆகிய இடங்களில் உள்ள தடுப்பு முகாமில் உள்ளவர்களை அவர்களது குடும்ப அங்கத்தவர் சென்று பார்ப்பதற்கான அனுமதிக் கடிதம் யாழ் கச்சேரில் வழங்கப்பட்டு வருகின்றது.

பூஸாவில் உள்ளவர்களை திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 8-30

(5-ம் பக்கம் பார்க்க)

● 1981 ஜனவரிமுதல் 1986 டிசம்பர்வரை

# ராணுவத்தால்வடக்குகிழக்கில் 14,705 தமிழர்கள் படுகொலை

(அலுவலக நிருபர்]

அரசமுப்படைகளினது இராணுவ நடவடிக்கைகளினால் வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 14705 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

14705 தமிழர்களது இந்த படுகொலைகள் 1981-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 1986-ம்

(5-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

E. N. 8332 A 50 கார் சீரமைக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: அண்ணாமலை வைத்திய சாலை, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (9878)

Broilers இறைச்சிக்கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். C/o நல்லூர் வீடியோ சென்டர், Nallur Farm Center, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் [சி-9681)

பாவித்தவீட்டுத் தளபாடங்கள், கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், Floor Polisher, எலற்றிக் கேற்றல், Guitar [கிற்றார்], R. X 60 National கசற் றேடியோ, Formica சாப்பாட்டுமேசை Office மேசை, Meat Safe, மேசைகள், Vono Spring Beds மற்றும் பலஉடன் மலிவுவிலையில் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம் சி-9837

26ம் திகதி நடைபெறும் புலமைப்பரிசிற் பரீட்சை ஆண்டு 6 விசேட சித்திக்கான பயிற்சி நூல்கள் விற்பனையாகின்றது. சொற்பபிரதிகளே கைவசம் உண்டு. உடன்பெற்று பயில்வதன் மூலம் திறமைச் சித்திக்கு உத்தரவாதம் பெறுங்கள். புதியகணிதப்பயிற்சி ஆண்டு 6, புதிய தமிழ் மொழிப்பயிற்சி ஆண்டு 6. விற்பனையாளர்: ஞானசுரபி புத்தகக் கம்பனி, யாழ்ப்பாணம். சி-9859

## கண்ணீர் அஞ்சலி



மார்க்கண்டு
பரம்சோதி
(வைத்தியர்)

ஆண்டவன் படைப்பு:
8-11-1940
ஆள்பவன் பறிப்பு:
13-07-1987

எல்லோருக்கும் அன்பனாய், எல்லுயிர்க்கும் தொண்டனாய் இறுதி மூச்சுவரை பணிபுரிந்த கலட்டி வீதி, கரவெட்டி மேற்குப் பகுதியைச் சேர்ந்த மா. பரம்சோதி அவர்கள் 13-07-87-ல் அரச படையினால் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி கேட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளைச் செய்தும், செய்ய உதவிய நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

மா. ஜெகசோதி
குடும்பத்தினர்.

மல்லிகை,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி. (சி 9888)

## விற்பனைக்கு

சுன்னாகம் பஸ் நிலையம் முன்பாக உள்ள சக்தி என்ரர்பிறைஸ் அச்சகம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ். மரியநாயகம் [9879]

பிரம்பு ஹோல் செற். பலவித கட்டில்கள். கதிரைகள், மேசைகள், தொட்டில்கள், Cot, Screen, Cabinet, Easy-chair, Ice cream beater, Electric Cooker with oven, Ceiling/Table Fan, Cigma pump, Type writer மற்றும் பலபொருள்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9874

மொரிஸ் மைனர் EN 6000 உடன் விற்பனைக்குண்டு. சனி. ஞாயிறு ஆகிய தினங்களில் கீழ்க்கண்ட விலாசத்தில் பார்வையிடலாம். ரூம்ரூச், சித்தன்கேணி [Navalar Institute முன்னால்] [சி-9886]

இரண்டு மாத Alsation [Wormed and Weaned] நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (சி 9882)

## லொறி பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பப் பத்திரம்

கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தில் இஸ்கூஸ் காப் மொடல் (6 டொன் நிறை) லொறி ஒன்றிற்கு வெட்டி பொடி அடிப்பதற்காக கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும், "தலைவர், கரைச்சி வடக்கு ப நோ. கூ சங்கம், பரந்தன்." என விலாசமிடப்பட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "லொறி பொடி அடித்தல்" என எழுதப்பட்டு 05-08-1987 நண்பகல் 12மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

ஒப்பம்
தலைவர்.

பொது முகாமையாளர்,
கரைச்சி வடக்கு ப. நோ. கூ.
சங்கம்,
பரந்தன்.
15-07-1987. [ஏ 1926]

## கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன் கேள்வி விண்ணப்பம் வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்திலுள்ள வெற்றுச்சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு விண்ணப்ப வைப்புப்பணம் ரூபா 110/- (ரூபா 100/- திருப்பி வழங்கப்படும்) செலுத்தி விண்ணப்பப்படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பதிவுத்தபால் மூலம் "பொது முகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்" என்ற முகவரிக்கு 05-08-87 திகதிக்கு முன் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்விண்ணப்ப விபரத்தினை எழுதி, அனுப்புதல் வேண்டும்.

பொது முகாமையாளர்
கரைச்சி வடக்கு ப. நோ. கூ.
சங்கம், பரந்தன்.
[ஏ 1927]

## விற்பனைக்கு

நல்ல இன வளர்ப்பு மீன்களும், மீன்சாப்பாடும் விற்பனைக்கு உண்டு. இரத்தின வாசா, கருவேலடி லேன், (பழைய புகையிரத வீதி) கொக்குவில் கிழக்கு. (சி 9883)

Bairaha Farms பிறவுண் பேட்டுக்குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Christombu Farm பிறவுண்பேட்டுக்குஞ்சுகள், Hypeco கறுப்பு சேவற்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் [சி-9889]

உருத்திரவீணை [கலோஷேத்திரா] விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. வேலாயுதம், C/o சோதிப்பிள்ளை, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (சி-9890)

கடைச்சல் இயந்திரம் (Lathe Machine) வெல்டிங் றன்ஸ்போமர் (England) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: ஸ்ரார் ரேணிங் வேக்ஸ், 233, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (சி-9892]

நல்ல நிலையில் உள்ள 12'', 20'' கறுப்பு வெள்ளை ரெலிவிசன் நாஷனல் 7000 வீடியோ டெக் விற்பனைக்குண்டு. நாஷனல்[300, 370, 7000, 2000, வீடியோ டெக் IC கள் மெக்கானிக்கல் உதிரிப் பாகங்கள், சகல அளவுள்ள ரெலிவிசன் ரியூப், ரியூனர், Fly Back IC களும் விற்பனைக்குண்டு. Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி [றெயில்வேகடவையருகாமை] யாழ்ப்பாணம். [சி 9884]

சொனி K V. 2032, M. E. 20'' கலர் ரீ. வி. 'பிலிப்ஸ்' குளிர்சாதனப் பெட்டி 'சிங்கர் 270' எலக்ரிக் தையல்மெஷின். நாஷனல் RX 5045 F ரூ இன் வண், நாஷனல் RX-FM49F, ரூ இன் வண், 'அக்காய்' VS-PIEV வீடியோ டெக், 'பிக்ஸ்ரோன்' கசட் மட்டும். 'சன்யோ' கார் ரேடியோவும், கசட்டும், ஓட்டோ றிவேர்ஸ் தொடர்பு: ரெலி வொயிஸ் என்ஜினியேர்ஸ், 184/A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 9872)

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி

நல்லூர் செட்டித்
தெருவைச் சேர்ந்த
அமரர்
டாக்டர் சரவணமுத்து
சோமசுந்தரம்
அவர்கள்

மண்ணில்: 02-11-1912
விண்ணில்: 27-07-1978

எங்கள் அருமைத் தெய்வமே உங்கள் பிரிவால்
உள்ளம் நெகிழ்ந்து
நொந்து ஒன்பது வருடங்கள் சென்றதையா.
சென்ற இந்த நாளிலே,
சீராய்த்துயின்றறியோம்
சுவை தெரிய உண்டறியோம்
மாறாத்துயரமையா இந்த
மானிலத்தில் வாழும் மட்டும்

எங்கள் குல விளக்கே
உங்கள் திருவுருவம் என்றென்றும் எம் முன்னால் அணையாத ஜோதியாய் இருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டும்: அன்பு மனைவியும், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள்.

டாக்டர் ராஜன்,
கிருஷ்ணகிளினிக்,
ஜின்னா வீதி,
யாழ்ப்பாணம்.

இல. 2, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
சி-9856

## வடக்கு கிழக்கு ஊழியருக்கு ஊக்குவிப்பு பணம் வழங்கக் கோரிக்கை

[வவனியா நிருபர்]

"வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் அனைவருக்கும், அவர்கள் அப்பகுதி வாக்காளராக இருந்தாலும்சரி, விரும்பி அந்த இடங்களுக்கு அவர்கள் சென்றாலும்சரி ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவேண்டும்"

வவனியா அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் அக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

"வாழ்க்கைச்செலவுப் புள்ளிக்கேற்ப கொடுப்பனவு செய்யப்படாததற்குகண்டனம்தெரிவிப்பதோடு வாழ்க்கைச் செலவுப்புள்ளி ஒவ்வொன்றுக்கும் பத்துரூபாவீதம் கொடுப்பனவு செய்யப்படவேண்டும்".

"பொறுப்புநிலை அஞ்சலதிபர்களுக்கு வாடகையற்ற விடுதி வழங்கப்படவேண்டும். அல்லது அவர்களின் வசதியீனத்தையும் கவனத்தில் கொண்டு முந்நூறு ரூபா விசேட கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

விசேடதர அஞ்சலகங்களில் கடமையாற்றும் கோலஉடை ஊழியர்களின் பரிசோதகர்கள் முதலாம் வகுப்பு உத்தியோகத்தர்களாக இருக்கவேண்டும்

'கிளிநொச்சி தனி நிர்வாக மாவட்டமாக இருப்பதால் அதற்கென தனி பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் பிரிவு ஒன்றை உருவாக்கவேண்டும்.

'அஞ்சல் தொலைத்தொடர்பு ஊழியர்களுக்கு ஐந்துநாள் வேலைவாரத்தை நடைமுறைப் படுத்தாமைக்கு கண்டனம் தெரிவிப்பதோடு சகலருக்கும் ஐந்துநாள் வேலை வாரத்தினை நடைமுறைப்படுத்தவேண்டும்"

## சேவை

பாஸ்போர்ட், ரீக்கற்றிங் விசா, பாஸ்போர்ட் புதுப்பித்தல், சர்வதேச வாகன அனுமதிப்பத்திரம் என்பன செய்து கொள்ள 'ஹரிஹரன் என்ரபிறைஸ்', 337, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். சி-9823

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், சனி
கோப்பாய் தெற்கு நாவலடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பொதுக்கூட்டம் அண்மையில் தலைவர் சு இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் இவ்வருடத்திற்கான உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்: சு. இராமலிங்கம், செயலாளர்: மு. விக்னேஸ்வரன், பொருளாளர்: அ. சந்திரசேகரமும் ஏனைய உறுப்பினர்களாக சு. மகேஸ்வரன், த. ஜெயராசா, மு. பாலசிங்கம், க. வைத்திலிங்கம், சி. கந்தையா, சு. சுப்பிரமணியம், சு. நாகரட்ணம், சே. சதாசிவம் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

CITY & GUILDS OF LONDON INSTITUTE

**Quantity Surveying-Part I & II**

1988-ம் ஆண்டுப் பரீட்சைக்காக நடாத்தப்படும் வகுப்புக்கள் 05-08-1987-ல் ஆரம்பமாகின்றன.
விபரங்களுக்கு: ATLAS INSTITUTE,
ஆடியபாதம் றோட், திருநெல்வேலி. [சி-9854)

## சில்வா வாச் வேக்ஸ்

10, நவீன சந்தை யாழ்ப்பாணம்.
14-7-87 முதல் வழமையான இடத்தில்
வழமைபோல் இயங்கும் என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.
(சி-9814)

## MEDICAL LABORATORY TECHNOLOGIST

Closing date for application Bio Data and Curriculum Vitae extended till 15.8.1987 as requested by out station candidates.

DIRECTOR,

**Maternity and Nursing Home, Market Square, Chankanai.**

[ஏ 1917]

## மலிவு விலையில் புடவை

கையிருப்பு அகற்றல்
வெள்ளைப் பப்பிளின், கலர் பப்பிளின், சீத்தை
என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். குறிப்பிட்ட தொகையே கையிருப்பில் உண்டு.
ப. நோ. கூ. சங்கம், சிறு உடுப்புக்கள் தயாரிப்போருக்கு விஷேச கழிவு உண்டு.

றேட் சென்ரர்
ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
155, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்
(சி- 9887)

● எல்சல்வடோரில்—

## காயமடைந்தோரை ஏற்றச் சென்ற

# அமெரிக்க உதவித் தளபதியும்

# 6 சகாக்களும் ஹெலி விபத்தில் பலி!

சன்சல்வடோர், ஜூலை. 17

**எல்சல்வடோரிலுள்ள அமெரிக்க படைகளின் உதவித் தளபதி லெப்டினன்ட் கேர்ணல் ஜேம்ஸ் பவில் உட்பட வேறு ஆறு அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஹெலிகாப்டர் விபத்தொன்றில் உயிரிழந்தனர். எல்சல்வடோரின் தலைநகரான சன்சல்வடோருக்கருகேயுள்ள 'இரிபாஞ்சோ' ஏரியில் இந்த விபத்து நேற்று இடம்பெற்றது.**

எல்சல்வடோரில் இடது சாரிக் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் போரிட்டுவரும் எல்சல்வடோர் துருப்பினர்கள் சிலரும், அவர்களது அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் சிலரும் நேற்று மோதலொன்றில் காயமடைந்தனர்.

அவர்களை ஏற்றி வருவதற்காகச் சென்றபோதே இந்த விபத்து இடம் பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

வானிலைக்குழப்பமே இந்த விபத்துக்குக் காரணம் என்று விபத்து நடந்த இடத்துக்குச் சென்ற தொழில்நுட்பவியலாளர்கள் தெரிவித்தனர்.

1980ம் ஆண்டு அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் எல்சல்வடோரில் பணியாற்ற ஆரம்பித்தபின்னர், நேற்றைய விபத்துடன் அங்கு கொல்லப்பட்ட அமெரிக்க இராணுவத்தினரின் எண்ணிக்கை 12 ஆகுமென்று அறிவிக்கப்பட்டது.

---

## பென்சனர்கள் ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்த பென்சனர்களின் பிரச்னைகளை ஆராய்ந்து அது தொடர்பாக நிவாரண நடவடிக்கைகளை எடுக்க ஒரு ஆலோசனைக் கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

---

## ★ இந்திய ஜனாதிபதி

# "வெங்கட்ராமனால் இந்திய 'தேசியமொழி'யை சரிவர பேசமுடியாது"

### —மைக்வூல்ட்றிட்ஜ்



புதுடில்லி, ஜூலை, 17

"இந்தியாவின் புதிய ஜனாதிபதி திரு ராமசாமி வெங்கட்ராமன் இந்தியாவின் தேசிய மொழியை சரளமாகப் பேசமுடியாத ஒருவர்; பிழையின்றியும் பேசமாட்டார்" என்று இவரைப்பற்றிக் குறிப்பிட்ட இந்திய பி பி ஸி நிருபர் மைக்வூல்ட் றிட்ஜ் தெரிவித்தார்.

திரு வெங்கட்ராமனின் ஜனாதிபதி பதவி பற்றி நிருபர் மைக் மேலும் கூறியதாவது:- "திரு வெங்கட்ராமன் (76 வயது) சட்டத்தரணியாகவிருந்து 45 வருட அரசியலின் பின்னர் இந்தியாவின் அதி உயர்ந்த பதவியைப் பெற்றுள்ளார்.

இவர் ஆங்கிலேயர் ஆட்சியின்போது 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் சேர்ந்து சிறை சென்ற ஒருவர்.

நிதி, பாதுகாப்புத்துறை மந்திரிப் பதவிகளை வகித்து மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தியினால் உதவிஜனாதிபதியாக்கப்பட்டார்.

"இன்று இந்தியாவின் அதிஉயர்ந்த பதவியான ஜனாதிபதிப்பதவியை இவர் பொறுப்பேற்றுள்ளார். ஆயினும் இந்தியாவின் தேசியமொழியான ஹிந்தியை சரளமாகவோ, பிழையின்றியோ இவரால் பேசமுடியாது".

இதுபற்றி அவரிடம் கேட்டபோது "எனது இனம் வேறு; மொழி வேறு" என்று பதிலளித்தார்.

---

"பொருளாதாரக் குற்றவாளிகள் —

# ஆயுதபேர ஊழல் பேர்வழிகளை தண்டித்தது குற்றமா?"

## ராஜீவிடம் வி. பி. சிங் கேள்வி

உலகச் செய்திகள்

புதுடில்லி, ஜூலை-17

"பொருளாதாரக் குற்றவாளிகள், பாதுகாப்பு ஆயுதபேர ஊழற் பேர்வழிகளைக் கட்சி, அரசாங்கக் கொள்கைகளை அனுசரித்துத் தண்டித்தது குற்றமா?" என்று முன்னாள் இந்திய நிதியமைச்சரும், பாதுகாப்பமைச்சருமான திரு விஸ்வநாத்பிரதாப்சிங்பிரதமர் ராஜீவ் காந்தியிடம் கேட்டுள்ளார்.

இந்திய பாராளுமன்றில் திரு வி பி. சிங்கை இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்தும் வெளியேற்ற வேண்டுமென உறுப்பினர்கள் சிலர் குரல் எழுப்பிவருகின்றனர்.

இவர்களின் கோஷங்களுக்குப் பதிலளித்து திரு ராஜீவ் காந்திக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றிலேயே திரு சிங் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"இந்திரா காங்கிரஸ் கட்சியை நான் மிகவும் மதிக்கின்றேன். அக்கட்சிக்கு விரோதமாக நான் செயற்படவில்லை. அத்துடன் அரசுக்கு மாறாகவும் இருக்கவில்லை.

பொருளாதாரக் குற்றவாளிகள், ஆயுதபேர குற்றவாளிகள் ஆகியோரைக் கட்சியினதும், அரசினதும் கொள்கைகளுக்கு அமையவே தண்டித்தேன். இது எந்த வகையில் குற்றமாகும்?

இந்திரா காங்கிரஸ்கட்சியில் நான் இருப்பது அக்கட்சிக்கு இடைஞ்சலாக இருக்குமானால் எனது ராஜ்யசபை அங்கத்துவத்தையும், கட்சிப் பிரதிநித்துவத்தையும் துறக்கத் தயாராகவுள்ளேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவத்தினர்

# தொடர்ந்து தேடுதல் வேட்டை

## கால்நடையாக மக்கள் வெளியேற்றம்

ஒட்டுசுட்டான், வெள்ளி

முல்லைத்தீவு நகரிலிருந்து மூன்றுமைல்களுக்கு அருகாமையிலிருக்கும் முறிப்பு, கேப்பாபுலவு, வற்றாப்பளை, தண்ணீரூற்று, நீராவப்பிட்டி முள்ளியவளை ஆகிய கிராமங்களைச்சுற்றி ஆயிரத்திற்குமதிகமான இராணுவத்தினர் தேடுதல் வேட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஈடுபட்டுவருகின்றனர்.

இத்தேடுதல் வேட்டையில் ஹெலிகொப்டர்கள் தாழப் பறந்து தாக்குதல்களை நடாத்தி வருகின்றன.

அச்சத்தினால் 75 சதவீதமான பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி அயல்கிராமங்களுக்கு கால்நடையாக வெளியேறியவண்ணமுள்ளனர்.

குடியிருப்பாளர்கள் இல்லாத வீடுகளில் இராணுவத்தினர் குடியேறி அந்த வீடுகளில் இருந்த கால்நடைகளை அபகரித்துவருவதாகவும் தெரியவருகிறது.

காட்டுவிநாயகர் சந்தி, வற்றாப்பளை சந்தி, மூன்றும் கட்டைச்மந்தி ஆகிய இடங்களில் தடைகள் போடப்பட்டு சோதனையிடப்படுகிறது.

முள்ளியவளையிலிருந்து தண்ணீரூற்றுவரை இராணுவத்தினர் சீருடையின்றி வருவதை காணமுடிந்தது.

---

## கிளிநொச்சிப் பகுதியில் கொள்ளை அதிகரிப்பு

[கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சிப் பகுதியில் பெரிய அளவிலான கொள்ளைச் சம்பவம் ஆயுதமுனையில் இடம் பெறுவது அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன் ஆறும்வாய்க்கால் பகுதியில் இரவுவேளை திடீரென துப்பாக்கி, வாள், கத்தி, பொலலுகள் சகிதம் கனகசிங்கம் என்னும் விவசாயியின் வீட்டிற்குள் உட்புகுந்த கோஷ்டி ஒன்று வீட்டில் இருந்த அனைவரையும் அறை ஒன்றில் வைத்துப் பூட்டிவிட்டு பல ஆயிரம் ரூபா பெறுமானமுள்ள நகைகள், பணம் உட்பட வீட்டில் இருந்த அனைத்துப் பொருள்களையும் கொள்ளையடித்து சென்றுள்ளது.

இதேவேளை கனகசிங்கம் வீட்டிற்குஅடுத்த வீட்டிலும் ஆயுதமுனை கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் கடந்த ஒரு மாதத்திற்குள் சுமார் 25 வீடுகளில் அடுத்தடுத்து இதுபோன்ற கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கிளிநொச்சியில் உள்ள மதுபானக் கடை உரிமையாளர் குணரெத்தினம் என்பவர் வீட்டிலும் அண்மையில் பல லட்ச ரூபா பெறுமதியான நகை, ரொக்கப் பணம் என்பனவும் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

இக் கொள்ளைக் கூட்டத்தின் சூத்திரதாரி எனக் கருதப்படும் இளைஞர் ஒருவரை பொது மக்கள் பிடித்து கிளிநொச்சிப் பொலிசில் ஒப்படைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

---

# வடபகுதி மக்கள் கடவுச்சீட்டு பெறுவதில் படும் சிரமநிலை

[சுண்டுக்குளி நிருபர்]

கடவுச்சீட்டு சம்பந்தமாக கொழும்பு குடிவரவுகுடியகல்வு திணைக்களத்திற்கு செல்லும் வடபகுதிமக்கள் யாழ். கடவுச்சீட்டுஅலுவலகத்திற்கு செல்லுமாறு வேண்டப்படுகின்றனராம்.

கடந்தவாரம் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற வாலிபர் ஒருவர் தமது கடவுச்சீட்டில் உள்ள புகைப்படம் பழுதடைந்துவிட்டமை காரணமாக வேறுபுகைப்படத்துடனும் மற்றும் தகவல்களுடனும் மேற்படி திணைக்களத்திற்கு சென்றிருந்தார். அங்கு கருமபீடத்திலிருந்த உத்தியோகத்தர் அவற்றைவாங்கிப் பார்த்த பின்பு இதனை யாழ்ப்பாணத்திலுள்ள கடவுச்சீட்டு அலுவலகத்தில் ஒப்படைத்தால் அவர்கள் புதுப்பித்து தருவார்கள் என்றுகூறி திருப்பி அனுப்பிவிட்டார்களாம்.

சம்பந்தப்பட்ட நபர் யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில் அவற்றை ஒப்படைக்க வந்த பொழுது தாம்இவற்றை ஏற்பதில்லையென்றும் புதுப்பித்தல் கடவுச்சீட்டு வழங்குதல் போன்ற சகல கருமங்களும் கொழும்பில்தான் நடைபெறுகின்றன என்றும், விண்ணப்பங்களை கையேற்று கொழும்பிற்கு அனுப்புவதுதான் இங்குள்ளவர்களின் கடமையென்றும் அவருக்குகூறப்பட்டதாம்.

இதேபோல கடவுச் சீட்டு உரிய நேரத்தில்வராது அவற்றைப்பற்றி விசாரிக்கச் செல்பவர்களுக்கும் கடவுச்சீட்டுகள் யாழ்ப்பாணம் கந்தோருக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அங்குபோய்பெற்றுச் செல்லுமாறும் பலருக்கு கூறப்படுகின்றதாம்.

---

மயிலிட்டி மார்புநோய் சிகிச்சை நிலையத்தில்

# நோயாளர் தொகை குறைவு

[பலாலி நிருபர்]

மயிலிட்டி மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் தற்போது மிக குறைந்தளவு நோயாளர்களே சிகிச்சைபெறுகின்றனர்.

முன்னர் 60 க்கும் மேற்பட்ட நோயாளர் சிகிச்சைபெற்று வந்த இவ் வைத்தியசாலையில் தற்பொழுது நாலு நோயாளர் மட்டுமே சிகிச்சைபெற்று வருகின்றனர்.

வெளிநோயாளர் பகுதிக்கு தற்போது எந்தவொரு நோயாளியும் சிகிச்சைக்காக வருவது இல்லைஎன தெரிவிக்கப்படுகிறது.

---

## பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு நிருமர்)

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 22ம் திகதி புதன் கிழமையன்று கல்லூரி அதிபரும் சங்கத் தலைவருமான அருட்திரு அன்ரன் இராசநாயகம் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

### மணிவாக்கு

சிறந்த மனிதன் அனுபவத்தைக்கொண்டு பேசுகிருன்; இன்னும் சிறந்த மனிதனே தன் அனுபவத்தைக் கொண்டு பேசாமலே இருந்துவிடுகின்ருன்.

—ஜப்பானிய பழமொழி

## நமது நோக்கு

# இந்திய குடியரசுத்தலைவர் பதவியில் ஒரு தமிழர்!

இந்தியாவின் எட்டாவது குடியரசுத் தலைவராக திரு. இராமசுவாமி வெங்கட்ராமன் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் இராதாகிருஷ்ணன், திரு வி. வி. கிரி போன்றவர்கள் ஏற்கனவே இந்தியக் குடியரசுத்தலைவர்களாய் இருந்துள்ளபோதிலும் திரு. வெங்கட்ராமன் தமிழ்நாட்டைச்சேர்ந்தவர் என்பது மட்டுமின்றி தமிழ் இனத்தவருமாவார் என்பதால் உலகெங்கும் வாழும் தமிழர்கள் அனைவருமே இது குறித்து முன்பைவிட மகிழ்ச்சியும் பெருமையும் கொள்ள இடமுண்டு.

தமிழ்நாட்டில் தூயதமிழுக்கு பேர்போன தஞ்சை தரணியைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு வெங்கட்ராமன், சென்னை உயர்நீதிமன்றில் வெற்றிகரமாக தொழில் நடத்திய சட்டவல்லுனர். சிறந்ததொழிற் சங்கவாதி. அரசியலில் நேர்மைக்கும், சிறந்தநிர்வாகத்துக்கும் பேர்போனவர். பெருந்தலைவர் காமராஜராலும், அன்னை இந்திராகாந்தியினலும் அரவணைத்து வளர்க்கப்பட்டவர்.

திருமதி காந்தியின் அமைச்சரவையில் பொறுப்புள்ள நிதியமைச்சராகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்து பணியாற்றிய அவரது சிறப்புத் தகுதிகளை உய்த்துணர்ந்திருந்த திருமதி காந்தி குடியரசுத் தலைவர்பதவிக்கு வரக்கூடிய சகலதகுதிகளையும்அவரிடம் கண்டு அதற்குபயிற்சியளிப்பதுபோல் துணைக்குடியரசுத் தலைவராகவும் ராஜ்ய சபைத்தலைவராகவும் நியமித்திருந்தார்.

துணைக்குடியரசுத் தலைவராக இருந்து அவர்ஆற்றிய பணிகளும், இந்தியஅரசியல் அமைப்பு விதிகளில் அவருக்கிருந்த அறிவும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் இன்றைய தலைவர்களின் மதிப்பையும், மரியாதையையும் பெற்றுத்தந்துள்ளன.

தேர்தலில் வெற்றிவாகை சூடியுள்ள திரு. வெங்கட்ராமனுக்கு இந்தியஅரசியல் வானில் சகல தரப்பினரும் பாராட்டும் வாழ்த்தும் கூறி வரவேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிட்ட நீதியரசர் கிருஷ்ண ஐயர், முன்னுள் குடியரசுத் தலைவர்திரு. சஞ்சீவரெட்டி, ஆந்திரா முதல்வர் திரு. என். டி. ராமராவ் முதலானோர் இதில் முக்கியமானவர்கள்.

திரு. வெங்கட்ராமனின் பழுத்த அனுபவமும், ஆழ்ந்த அரசியல்ஞானமும் இளைஞரான பிரதம மந்திரி திரு. ராஜீவ்காந்திக்கு மிகுந்த உறுதுணையாக இருக்குமென்று கருதவேண்டும்.

குறிப்பாக இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியப்பிரதமர் மிகுந்த அக்கறையுடன் சில பல நடவடிக்கைகளில் இறங்கிவரும் இவ்வேளையில் திரு. வெங்கட்ராமன் போன்றவர்கள் இவ்வாறன உயர்ந்த பதவிகளில் இருப்பது வரவேற்கத்தக்கது.

## வடமராட்சி: தனிப்பட்ட பரீட்சார்த்திகள்

இராணுவ கெடுபிடிகளின் காரணமாக வடமராட்சியிலிருந்து வெளியேறியுள்ள கல்லூரி மாணவர்களான க. பொ. த. (உயர்தரம்) பரீட்சார்த்திகளுக்கு வெளியிடங்களில் பரீட்சை நிலையங்களைக் கல்வித் திணைக்களத்தினர் ஏற்பாடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதேசமயம் அப்பகுதியைச் சேர்ந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் இவ்வாறு ஒரு ஏற்பாட்டை அவர்களால் செய்து கொடுக்க முடியாமல் போனது ஏன் என்று எமக்குப் புரியவில்லை.

கல்லூரி மாணவர்களைவிடத் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் குறைந்த எண்ணிக்கையாளர்தான் என்றபோதிலும் இராணுவத்தின் சந்தேகக் கண்களுக்குள்ளாகக் கூடிய 19-22 வயதிற்குட்பட்டவர்களாகவும் இவர்களே இருக்கிருர்கள். இராணுவ நடவடிக்கைகளும், தேடுதல்களும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அப்பகுதிக்குப் பரீட்சை எழுதவென இந்த இளைஞர்கள் தொடர்ச்சியாக எங்ஙனம் போய்வர முடியும்? போனலும் பரீட்சை எழுதும் மனேநிலை அவர்களுக்கு இருக்கமுடியாது.

வடமராட்சியைச் சேர்ந்த 1040 கல்லூரி மாணவர்களும், 567 தனிப்பட்ட மாணவர்களும் இம்முறை பரீட்சைக்குத் தோற்றவிருப்பதாகத் தெரிகின்றது. இவர்களில் வடமராட்சியைவிட்டு இடப்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு வெளியிடங்களில் பரீட்சை நிலையங்களை ஏற்பாடுசெய்திருப்பதுபோல் ஏனைய தனிப்பட்டவர்களுக்கும் தனியாக ஓரிடத்தை ஏற்பாடுசெய்யவேண்டுமெனக் கல்வித் திணைக்களத்தை இம்மாணவர்களும் பெற்றோரும் கேட்டு வருகிருர்கள்.

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் சுமுக நிலைமையைத் தோற்றுவிக்க அதிகாரிகள் முயன்றுவருவது உண்மையாயிருந்தாலும் இடம்பெயர்ந்துள்ள இந்த இளைஞர்கள் உடனடியாக மீண்டும் அப்பகுதிகளுக்குத் திரும்பிப்போகும் நிலையில் இல்லை. இவர்களில் பலர் வெளியிடங்களிலேயே பல மாதங்கள் தங்கியிருந்து ஏராளமான பணம் செலவிட்டுப் பரீட்சைகளுக்கான ஆயத்தம் செய்துள்ளார்கள்.

இவர்களின் ஆசைகள் நிராசையாகி விடாதவாறு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களென்று நம்புகின்றேம்.

தலவாக்கொல்லை

# ஆசிரிய பயிற்சிக்கல்லூரியின் அவலநிலை!

கடந்த வருடம் அக்டோபர் மாதம் நடைபெற்ற ஒரு அசம்பாவிதத்தினல் மூடப்பட்ட தலவாக்கொல்லை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி பல இழுபறிகளின் பின் புதிதாக ஹற்றனை அடுத்துள்ள கொட்டக்கலை என்ற இடத்தில் யூன் மாதம் முதலாம் திகதி முதல் திறக்கப்படும் என்றும், கிராமிய கைத்தொழில் அமைச்சர், திரு. எஸ். தொண்டமான் வைபவ ரீதியாக திறந்து வைப்பார், என்றும் பெரிய அளவில் விளம்பரப் படுத்தப்பட்டது

ஆசிரிய பயிற்சி பெற்று வந்த எழுபது பெண்கள் நாற்பத்தைந்து ஆண்கள் அடங்கிய நூற்றிப்பதினைந்துபயிற்சிஆசிரியர்கள் மீண்டும் தமக்கு பயிற்சி வகுப்பு தொடங்குவதனல் ஆசையுடன் கொட்டக்கலைக்கு சென்றபோது அந்த இடம் மூடப்பட்டு இருந்தது. இதனல் அதிர்ச்சி அடைந்த மாணவர்கள் தலவாக்கொல்லையில் உள்ள பழைய ஆசிரியபயிற்சிக் கல்லூரிக்கே சென்றனர். அங்கு, புதிதாக திறக்கப்படவுள்ள பாடசாலைக் கட்டிடத் திறப்பு தமக்கு இன்னும் கிடைக்கவில்லை என்றும் அதனல் மீண்டும் தலவாக்கொல்லை ஆசிரியர் பயிற்சி கல்லூரியிலேயே வகுப்புக்கள் நடைபெறும் என்றும் கல்லூரியின் புதிய அதிபர் திரு நடராஜாவினல் அறிவிக்கப்பட்டது.

முன்பு விரிவுரைகள் நடத்தப்பட்ட இடங்கள் உடைக்கப்பட்டமையால் பெண்கள் விடுதியாக இருந்தபகுதியிலும், உணவு அருந்தும் சிறு மண்டபத்திலும் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன.

முன்பு அதிபராக இருந்த திரு. காரை சுந்தம்பிள்ளை தமிழ், இலக்கணம், உளவியல், கற்பித்தல் பயிற்சி, பாடல் திறனய்வு போன்ற பாடங்களிற்கு விரிவுரை நடாத்தி வந்தார். இவர் இடமாற்றம் பெற்றுச்சென்ற பின் இவருக்கு பதிலாலக இந்தப் பாடங்களிற்கு விரிவுரை நடத்த ஒருவரும் இல்லை.

**நுவரேலியா நிருபர்**

உடற்கல்வி ஆசிரியரின் மரணத்தின் பின்னர் அவருக்குப் பதிலாக உடற்கல்வி ஆசிரியராக எவரும் நியமிக்கப்படாமையினல் இந்தப்பாடமும் கற்பிக்கப்படுவதில்லை.

தற்போது அதிபர் திரு. நடராஜாவும், செல்வி பரமேஸ்வரியும் மட்டுமே முழுநேர விரிவுரையாளர்களாகக் கடமைபுரிந்து வருகின்ருர்கள். இவர்களில் ஒருவர் விடுமுறையில் செல்லும்போது மற்றவர் அதிபர்வேலையுடன் முழுப் பாடங்களையும் கற்பிக்கும்நிலை இருந்துவருகின்றது.

பெண்கள் விடுதி, விரிவுரை மண்டபமாக மாற்றப்பட்டமையினல் பெண்கள் தங்குவதற்கான வசதிகள் இல்லை. இதனல் தலவாக்கொல்லையில் இருந்து மிகவும் நீண்டதூரத்துலுள்ள பதுளை, பண்டாரவளை கொழும்பு, கண்டியைச் சேர்ந்தவர்களும், தினமும் வீடுகளிலிருந்து வர வசதி இல்லாதவர்களும் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவில்லை. இதனல் தமது பயிற்சியைத்தொடரவிருந்த ஆசிரிய மாணவர்கள் தங்குமிடம்தேடி அலைகின்ருர்கள். தங்குமிடம் தேடிய ஒரு சிலர் பெருமளவு பணத்தைக் கொடுத்து தங்க வேண்டி உள்ளது.

முழுமையான விரிவுரைகளோ, தங்குமிட வசதியோ இல்லாத ஆசிரிய மாணவர்கள் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தோற்றவேண்டியநிலையில் இருக்கின்ருர்கள். தங்குமிடவசதிபற்றி ஆசிரிய மாணவர்கள் அதிபரிடம்கேட்டபோது "அதுபற்றி என்னிடம் கேட்கவேண்டாம். ஆனல் விரிவுரைகளுக்குக் கட்டாயம் சமூகமளிக்கவேண்டும்" என்று கூறியுள்ளாராம். சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு நடவடிக்கை எடுக்காமல் யார் எடுப்பது என்று ஆசிரிய மாணவர்கள் விரக்தியுடன் கேட்கின்ருர்கள். பெரிய அளவில் விளம்பரப்படுத்தும் தொழிற் சங்கங்களும் ஏனைய நிறுவனங்களும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்காதது மிகவும் வேதனைக்குரிய செயலாகுமென்று மாணவர்கள் கருத்துதெரிவித்தனர். மேலும் தொடர்ந்து இவ்வருட முடிவு வரை தற்போது நடைபெறும் இடத்திலேயே பயிற்சிகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

சட்டவிரோத மின் பாவனை:

# யாழ். அபிவிருத்திச் சபைக்கு ரூ. 2 கோடி நட்டம்!

(சுண்டுக்குளி நிருபர்)

"சட்டவிரோத மின்பாவனையால் யாழ். அபிவிருத்திச் சபைக்கு 2 கோடிரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது இதனைத் தடுப்பதற்கு பொதுமக்கள் முன்வர வேண்டும்."

இவ்வாறு ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர்ஆலயமுன்பாக 6 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பெற்ற உப மின்நிலைய திறப்புவிழாவில் கலந்துகொண்ட யாழ் அபிவிருத்திச் சபையின் கணக்காளர் கே. எஸ். இராசேந்திரன் தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையளர் திரு அன்ரன் அல்பிரட்டினல் புதிய உப மின் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் திரு இராசேந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில்: குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சட்டவிரோத மின்பாவனையை ஒழிப்பதற்குப் பொதுஸ்தாபனங்களும் பொது மக்களும் எம்முடன் சேர்ந்து ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

யாழ். அபிவிருத்திச் சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தினரும் ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையமும் ஒன்றிணைந்து நடாத்திய இவ்வைபவத்தில் யாழ். அபிவிருத்திச்சபையின் உதவிச் செயலாளர் ஏ. பரமநாதன், ஆனைக்கோட்டை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்டஉத்தியோகத்தர் எஸ். மகாதேவா உட்பட பலர் உரையாற்றினுர்கள்.

## தமிழ் சனதிபதி வாழ்க!

பண்புடைய தமிழகத்தில் பிறந்து மனச்சான்று,
உண்மை, வீரம் முதலியவை பெற்று
கண்களான எண்ணெழுத்துப் பயின்று
எண்ணற்ற கலைகளை முறைப்படி கற்று
எண்ணியபடி சட்டத்தரணியானுர்
சட்டங்கள் கற்று

கண்மணியொக்கும் இந்தியாவுக்கு
ஏற்பட்ட அவதூறு
மண்ணை விட்டகல காந்தியோடிணைந்து இடையூறு
குண்டு சிறைவாசம் முதலியவற்றை யேற்று
விண்ணதிர விடுதலைக் கீதமிசைத்து வென்று
கொண்டனன் சுதந்திரம் இந்தியருக் கென்று

எண்ணியபடி மக்களுக்குத்
தொண்டுசெய்ய வென்று
கொண்ட ஆசையினலமைச்சரானுர்
போட்டியில் வென்று
உண்மையினல் இந்திராகாந்தியைக்
கவர்ந்து அன்று
மண்ணவர்போற்ற உபசனதிபதிப்
பொறுப்பை ஏற்று
விண்ணவர்போற்ற பாரதசனதிபதினுர்
வெங்கட்ராமன் இன்று

கவிஞர் க. யோகராசா

## மயிலிட்டிபகுதிக்கு மின்சாரம்

பலாலி, வெள்ளி

நீண்டகால இடைவெளிக்குப்பின் மயிலிட்டி, தையிட்டிப் பகுதிகளுக்கு மின்சாரம் கிடைத்துள்ளது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று பிரதான மின் வயர் ஒன்றில் கடந்த மூன்று மாதத்திற்கு முன்னர் விழுந்து வெடித்ததால் அப்பகுதி மின்சாரம் இல்லாது இருளில் மூழ்கியது.

மின்சார சபை எடுத்துக் கொண்ட துரித நடவடிக்கையையடுத்து இப்பகுதிக்கு மீண்டும் மின்சாரம் கிடைத்துள்ளது.

## நோயாளர் சிரமம்

பலாலி, வெள்ளி

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் நோயாளர் பெரும் சிரமப்படுகின்ருர்கள்.

வைத்தியசாலைக்குத் தண்ணீர் விநியோகிக்கும் பகுதியிலுள்ள இரு மோட்டர்களில் ஒன்று பழுதடைந்துவிட்டதையடுத்தே இந்நிலை உருவாகியுள்ளதாக அறியப்படுகின்றது.

## லண்டன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. டிரென் பகத் யாழ் வந்துள்ளார்?

திரு. பகத் நேற்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதமிருந்த 12 யுத்தக்கைதிகளுக்கான உண்ணாவிரத இறுதியில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டார்.

## தடுப்புக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணி தொடக்கம் மாலை 4-30 மணிவரையும், காலி பொலிஸில் உள்ளவர்களை கிழமை நாட்களில் காலை 9-30 மணி தொடக்கம் மாலை 5-30 மணி வரையும், வெலிக்கடையில் உள்ளவர்களை செய்வாய், சனி ஆகிய தினங்களில் காலை 9-30 மணி தொடக்கம் மாலை 5-30 மணிவரையும் பேலவத்தையில் உள்ளவர்களை செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் காலை 9-30 மணி தொடக்கம் மாலை 5-30 மணி வரையும் பார்வையிடலாம்.

ஒருதடவையில் இரண்டு குடும்ப அங்கத்தவர்கள் மட்டுமே சென்று பார்வையிடலாம். குடும்ப அங்கத்தவர்கள் என்பது தாய், தந்தை, சகோதரர்கள் என்பவர்களுடன் கணவன், மனைவி பிள்ளைகள் ஆகியோரும் அடங்குவர்.

மேற்குறிப்பிட்ட தடுப்பு முகாம்களில் உள்ள தமது உறவினரைப் பார்க்க விரும்புவோர் அத்தகைய நபர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதையும் அவரின் உறவு முறையின் தன்மையையும் வெளிப்படுத்தும் சத்தியக் கடதாசி ஒன்றை யாழ். அரச அதிபருக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் தாம் வதியும் பிரிவின் கிராம சேவையாளர் உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுக் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் அனுமதி கோருபவர்கள் தமது அடையாள அட்டையுடன் யாழ். கச்சேரிக்கு நேரடியாக வருதல் வேண்டும்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன் ச. தினேஸ்

சுன்னாகம் கிழக்கு சந்திரகுமார் சாவித்திரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தினேஸ் நேற்று [17-07-1987] முதலாவது பிறந்ததினத்தை மேற்கு ஜேர்மனியில் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, கோப்பாய் அப்பம்மா, விஜயா அத்தை, சுன்னாகம் தாத்தா, அம்மம்மா, மாமாமார், நந்தினி சித்தி, மச்சாள் விஜித்தா, டென்மார்க் சித்தப்பா, ஜேர்மனி பெரியமாமா குடும்பத்தினர் ஆகியோர் அன்புடன் வாழ்த்துகிறார்கள்.

(சி 9897)

## இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் அவர்களை விடுதலைசெய்கது ஆனால் நாங்கள் கைது செய்யப்பட்டு நான்கு மாதங்களாகியும் அரசு எமது விடுதலைக்காக எவ்வித நடவடிக்கையினையும் எடுக்காதகினையிட்டு பெரும் கவலையடைகிறோம் என்று கூறினர்.

### தொடர்ச்சியான போராட்டம்

'இனியும் எம்மை விடுதலை செய்வதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் தொடர்ச்சியாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவோம். இதனையும் அரசாங்கம் கவனத்தில் எடுக்காவிட்டால் தற்கொலை செய்வோம் அல்லது எம்மை சுட்டுக் கொல்லுமாறு புலிகளிடம் கேட்போம்.

எமது இந்த நடவடிக்கையின் மூலம் அரசாங்கத்தினைப் பற்றி சிங்கள மக்களும் அரசபடையினரும் உணர்ந்து கொள்வதுடன் இனிமேலும் எந்த ஒரு படையினருக்கும் இந்நிலை ஏற்படாது என்றும் உண்ணாவிரதிகள் தெரிவித்தனர்.

எங்களை புலிகளிடமிருந்து விடுவிக்க எமது பெற்றோர்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் தான் புலிகளுடன் பேச்சு நடத்தி எம்மை விடுவிக்க வேண்டும். என்றும் அவர்கள் கூறினார்கள்.

நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்ட இந்த அடையாள உண்ணாவிரதம் மாலையில் முடித்து வைக்கப்பட்டது. [ஒ]

## 1981

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டு டிசம்பர் மாதம்வரையிலானது என்றும் அந்தப் புள்ளிவிபரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்தப் புள்ளி விபரங்கள் இந்திய தூதரக அதிகாரிகளிடமும், இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடமும் கையளிக்கப்பட்டுள்ளன.

இராணுவ நடவடிக்கைகளின் போது படுகொலைசெய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கிழக்கு மாகாணத்தில் திருமலை, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர்கள் என்றும் அந்தப் புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இப்புள்ளி விபரங்களின்படி 1981-ம் ஆண்டு 846 தமிழரும், 1982-ம் ஆண்டு 1380 தமிழரும், 1983-ம் ஆண்டு 3678 தமிழரும், 1984-ம் ஆண்டு 3301 தமிழரும், 1985-ம் ஆண்டு 2695 தமிழரும், 1986-ம் ஆண்டு 2805 தமிழரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இராணுவப் படுகொலைகளைவிட 512 தமிழர்கள் ஆஸ்பத்திரிகளில் பல்வேறு காரணங்களினால் மரணித்துள்ளனர் என்றும் அந்தப் புள்ளிவிபரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மந்திகை ஆஸ்பத்திரியில் நோயாளர் இல்லை

# பிரெஞ்சு டாக்டர்கள் குழு வைத்திய அத்தியட்சகருடன் ஆலோசனை

(அலுவலக நிருபர்)

வடமராட்சிப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மந்திகை ஆஸ்பத்திரிக்கு வைத்திய சேவை அளிக்கவந்த பிரஞ்சு டாக்டர்கள்குழு நேற்று காலை போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சி. என். நச்சினார்கினியனை சந்தித்தது.

இச்சந்திப்பின் போது வடமராட்சிப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அதிகம் பேர் இல்லாததினால் நாங்கள் அங்கு சேவை செய்வது உசிதமானகாரியமல்ல என்று இந்த டாக்டர்கள் குழு தெரிவித்துள்ளது.

இதனைத்தொடர்ந்து வடமராட்சிப்பகுதி மக்கள் கூடுதலாக தங்கியுள்ள சாவகச்சேரி, புத்தூர் ஆஸ்பத்திரிகளில் தங்களது வைத்திய சேவையை ஆரம்பிப்பதுபற்றி பணிப்பாளருடனும், வைத்திய அதிகாரி டாக்டர்கள் இ. தெய்வேந்திரன், மற்றும்செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இந்த ஆலோசனையின் பிரகாரம் சாவகச்சேரி, புத்தூர், மானிப்பாய் ஆகிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள ஆஸ்பத்திரிகளை இக்குழு பார்வையிடவுள்ளது.

இவர்களை இந்திய நிவாரண மருந்துப் பொருள்களுக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் இந்த ஆஸ்பத்திரிகளுக்கு அழைத்துச் செல்வார். (வா)

## 3 ராணுவம் பலி

(கொழும்பு)

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் தமிழ் போராளிகளுடனான மோதலொன்றின் போது மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டது. (ரா)

## எம். ஜி. ஆர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தொலைபேசித் தொடர்பின்போது திரு. வெங்கட்ராமன் தமிழக மக்கள் தமது வெற்றிக்கு அளித்த ஆதரவு குறித்து தமிழக முதல்வரிடம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டதாகவும் கூறப்பட்டது. (ரா)

## ரணில் நைரோபியில்

(கொழும்பு)

கல்விஅமைச்சர் திரு. ரணில் விக்ரமசிங்கா பொது நலவாய அமைப்புநாடுகள்கல்வி அமைச்சர் மாநாட்டில் கலந்து கொள்ள கடந்த புதன்கிழமை நைரோபி சென்றார்.

## விசேட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வைத்திய சேவையில் சுமார் முப்பது டாக்டர்கள் ஈடுபட்டுள்ளதுடன் 4500க்கு மேற்பட்டோர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதற்காக பத்தாயிரம் ரூபாவரை இதுவரை செலவிடப்பட்டுள்ளதாக கூறப்பட்டது. (ரா)

# அலஸ் கமிஷன் முன் சாட்சியமளிக்கவிருப்போரை பதிவுசெய்துகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

யாழ். போதனா வைத்திய சாலை மீது கோட்டை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல்தாக்குதல்தொடர்பாக விசாரணை நடத்தவென நியமிக்கப்பட்டிருக்கும் 'அலஸ் கமிஷன்' இம்மாதம் 23ம்திகதி யாழ்ப்பாணத்தில் விசாரணைகளை மேற்கொள்ள விருப்பதால் கமிஷன் முன் சாட்சியமளிக்க விரும்புபவர்கள் உடனடியாக யாழ். அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

திட்டமிட்டபடி இக்கமிஷன் விசாரணைகள் இம்மாதம் 23ம் திகதி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டு வருகின்றன.

நாளை மறுதினம் இக்கமிஷன் எங்கு கூடுவது என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

அலஸ் கமிஷன் குழுவினர் யாழ்ப்பாணம் வந்தவுடன் ஷெல் தாக்குதலால்சேதமடைந்த யாழ். வைத்தியசாலைக் கட்டிடங்களை பார்வையிடுவர்.

யாழ். போதனா வைத்திய சாலை டாக்டர்கள், ஊழியர்கள், ஷெல்தாக்குதலால் காயமடைந்தோர், மருத்துவ பீட விரிவுரையாளர்கள் இக்கமிஷன் முன் சாட்சியமளிப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. (ஒ)

# அமிர்தாபச்சன் எம். பி. பதவியிலிருந்து இராஜிநாமா

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற அங்கத்தவரும் பிரதமர் ராஜீவ் காந்தியின் நெருங்கிய சகாவுமான அமிர்தா பச்சன் தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் திரு வி. பி. சிங்கும் தமது கட்சிப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின்முக்கியஸ்தர்கள் மூவர் பிரதமர் காந்தியினால் வெளியேற்றப்பட்டதன் எதிரொலியாகவே இவர்கள்தமது பதவியை இராஜினாமாச்செய்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. திரு. காந்தியின் உறவினரான அருண் நேரு, வித்யாகரன் சுக்ளா, அரிவ் முகம்மத் கான் ஆகியோரே கடந்த புதன்கிழமை கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்களாவர்.

இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தவிர்ப்பதற்காகவே இவர்கள் விலக்கப்பட்டார்களெனக் கூறப்படுகிறது.

## புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் நம்மை நன்கு கவனித்து வருவதாகவும் ஆனால் நமது எதிர்காலத்தைப் பற்றியும் விடுதலையைப் பற்றியும் சதா நினைத்துக் கவலைப்படவேண்டியிருப்பதாகவும் அவர் எம்மிடம் தெரிவித்தார்.

எங்களை நினைத்து வீட்டிலுள்ளவர்கள் கவலைப்படுகிறார்கள் அதேபோல் நாங்களும் கவலைப்படுகிறோம்ஆனால் அரசாங்கத்திற்கு எவ்வித அக்கறையுமில்லை வீட்டுக்காரருக்கு கடிதம் போட்டிருந்தும் எமக்கு இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை.

நாங்கள் வேலைக்கு வருவதற்குமுன் யாழ்ப்பாணத்திலுள்ள பிரச்சினைகள் எதுவும் தெரியாது. ஏனைய பிரதேசங்களில் நடைபெறும் பொலிஸ் நிலையங்கள் போல்தான் யாழ்ப்பாணத்திலும் இருக்கும் என்றுதான் இங்கு வந்தோம். முகாமிலிருந்து குறிப்பிட்ட திசை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளும்போது அப்பகுதியில் புலிகளின்முகாம்கள்தான் இருக்கின்றன என்ற கருத்தே எமக்கு வலியுறுத்தப்படுவதால்இந்தத் தாக்குதலில் அப்பாவி மக்கள் பாதிக்கப்படவில்லை என்று நினைத்தோம் என்று பொலிஸ் கான்ஸ்டபிள் அமரசேன தெரிவித்தார்.

நாங்கள் கைது செய்யப்பட்ட மூன்று மாதத்தில் எம்மை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்தினைக் கோரி உண்ணாவிரதமிருக்க முயற்சிசெய்தோம். விடுதலைப் புலிகள் எம்மை அவ்வாறு செய்யவேண்டாமென ஆலோசனை கூறினார்கள் என்று ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

### இந்திய நிவாரணம் பற்றி

இந்தியா அரசாங்கம் யாழ். மக்களுக்கு விமானத்திலிருந்து உணவு போட்டது இலங்கை அரசுக்கு அவமானமான செயல்என்றாலும் யாழ்ப்பாண மக்கள்மீது எரிபொருள் பொருளாதார தடைகளை அரசாங்கம் விதித்திருந்தமையால் இந்தியாவின் இந்நடவடிக்கை சரியானது என்றும் ஒரு சிப்பாய் கூறினார்.

பலாலி முகாமிலிருந்து தப்பிவந்த சிப்பாய் எம்மிடம் பேசுகையில் சுகவீனமுற்றுள்ள பெற்றோரைப் பார்க்க லீவு கிடைக்காததால் முகாமிலிருந்து தப்பியோடி யாழ்ப்பாணம் வந்த பஸ்ஸில் தமது வீடுசெல்ல தாம் நினைத்ததாக கொழும்பு போல் யாழ்ப்பாணத்திலும் தூரஇடத்து பஸ் சேவைகள் நடைபெறுமென தான் எண்ணியிருந்ததாகவும் கூறினார்.

தம்மை விடுவிக்க அரசாங்கம் முயற்சிகள் எடுக்கும் எனத்தாம் நம்பியதால் புலிகள் தம்மை விடுதலைசெய்ய வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். விடுதலைசெய்யப்பட்டு அவர் வீடு சென்றாலும் அங்கு அவரை சிறிலங்கா அரசாங்கம் கைது செய்து விடுமே என நாம் கேட்டபோது என்னை வவுனியா அல்லது திருமலையில் கொண்டுபோய் விட்டால் அங்கு தான் சிலவருடங்கள் ஒளித்திருந்துவிட்டு வீடுசெல்லலாம் என அவர் கூறினார். (ஒ-ஊ)

## வீரமரணம்

யாழ்ப்பாணம், சனி

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளி 'பதுமன' [தா. குயின்ரஸ் குரூஸ்-பெரியபண்டிவிரிச்சான்] வெடிவிபத்தொன்றில் சிக்கி நேற்று வீரமரணமடைந்துள்ளார். இவர் புலிகளில் வீரமரணமடைந்த 611-வது போராளியாவார்.

இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## இந்திய நிவாரண விநியோக கூட்டம்

யாழ்ப்பாணம்,சனி.

இந்திய நிவாரணப்பொருள்கள் விநியோகம் சம்பந்தமாக மேலும் ஆராய்வதற்கு இன்று உதவி அரசாங்க அதிபர்கள் பணிமனையில் கூட்டங்கள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உடுவில, தெல்லிப்பழை, நல்லூர், சங்கானை, கோப்பாய், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய உதவிஅரசாங்க அதிபர்கள் பணிமனைகளிலேயே இக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

## நன்றிநவில்தல்

காலஞ்சென்ற வீமன்காமம் மகா வித்தியாலய அதிபர் சிவராஜா அவர்களின் இறுதிக் கிரியைகளிலும், மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், தனிப்பட்ட முறையில் அனுதாபம் தெரிவித்தவர்கட்கும் இறுதிக்கடன் செவ்வனே நடைபெற உதவிய நண்பர்கள், ஆதரவாளர்களுக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்

இரதிதேவி சிவாராஜாவும்,
பிள்ளைகளும்,
உறவினர்களும்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி. (சி 9896)

## வடமராட்சி அகதிகளுக்கு உணவு உடை, நிதி வாரி வழங்குங்கள்

### ரி. ஆர். ஆர். ஓ. வேண்டுகோள்

யாழ்ப்பாணம், சனி

வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து நடைபெறும் இராணுவத் தாக்குதலால் பெருமளவு பாதிக்கப்பட்டு, அகதிகளாக அயல்கிராமங்களில் தஞ்சமடைந்துள்ள அப்பகுதி மக்களுக்கு வேண்டிய நல்ல உடுப்புவகைகளையும் இயன்றளவு நிதி உணவுப் பொருள்கள் ஆகியவற்றையும் வழங்கி உதவுமாறு அகதிகள் புனர்வாழ்வுக்கழகம், கருணையுள்ளம் கொண்டுள்ள மக்களுக்கு அவசரவேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து நடைபெறும் இராணுவத்தாக்குதலால் பல்லாயிரம் மக்கள் உடுத்த உடையுடன் மாற்று உடையின்றி வெளியேறி அயல் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். இவர்களுக்கு அத்தியாவசியமாக உணவுடன் உடைகளும் தேவைப்படுகின்றன. பெண்களுக்குரிய சேலை, சட்டை, பாவாடை, பெண் குழந்தைகளுக்குரிய சட்டைகள் ஆண்களுக்குவேண்டிய வேட்டி, சாரம், சேட், ஆண் குழந்தைகளுக்குரிய உடைகளை மக்கள் கருணையுளங்கொண்டு கிழிசல் இல்லாத நல்ல உடைகளாக வழங்கி உதவுமாறு பணிவன்புடன்கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்துடன் இயன்றளவு நிதிஉதவியும், உணவுப்பொருட்களும்வழங்கி ஆதரவு நல்குங்கள்.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் சனசமூக நிலையங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் இப்புனித பணியில் ஈடுபட்டு மேற்கூறிய வேண்டுகோளைச் செயற்படுத்தி உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நீங்கள் வழங்கும் நிதியையும், பொருள்களையும் "அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 91, செட்டித் தெரு, நல்லூர். யாழ்ப்பாணம்" என்ற முகவரியில் ஒப்படையுங்கள். நேரில் வந்து பெறவேண்டியிருந்தால் மேற்படி விலாசத்திற்குத் தெரியப்படுத்தினல், நிறுவன உறுப்பினர் அத்தாட்சியுடன் வந்து பெற்றுக்கொள்வார் என்பதனையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

காசோலையாக நிதி உதவி வழங்க விரும்புவோர் தலைவர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் [T R. R. O.) என்று எழுதி வழங்கலாம். (மா)

## "பெயர்களைப் பதிவுசெய்தும் நிவாரணம் கிடைக்கவில்லை"

சுட்டிபுரம் அம்பாள் ஆலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்கு நிவாரணம் எதுவும் ஒழுங்காக கிடைக்கவில்லை. அவர்கள் பெயர்கள் பதிவு செய்யப்பட்டதாக தெரிவித்தார்கள். ஆனல் அங்கு நிவாரணம் கிடைக்குமுன்னரே, 'ஹெலி' தாக்குதலை தொடர்ந்து அத்தனை பேரும் வெளியேறி விட்டார்கள். வெவ்வேருக பிரிந்து பல இடங்களுக்கு சென்றுவிட்டனர். இவர்கள் சென்றுள்ள சில இடங்களில் ஏற்கனவே அரச

வடமராட்சி அகதிகளில் அநேகமானேர் இன்னும் நிவாரணம் பெறவில்லை நொந்து போன அந்த மக்களுக்கு இந்திய உதவி இன்னும் வந்து சேரவில்லை. சில குடும்பங்கள்,வரும்போது, சொற்ப அரிசி, மாவு, சீனி கொண்டு வந்திருந்தனர். அதனை வைத்துத்தான் சரிக்கட்டுகிருர்கள். சிலர் கொடிகாமம் சந்தைக்கு சென்று தேவையானவற்றை வாங்கி வருகின்றனர். ஆனல் பலரிடம் அந்த வசதி கிடையாது அநேகர் உடுத்த உடையுடன் புறப்பட்டவர்கள்.

டாலும் வானத்தை பார்க்கிருர்கள். சைக்கிள் டயர் வெடித்தால் கூட எழுந்து ஓடுகிருர்கள். அவ்வளவு தூரம், வடமராட்சி தாக்குதல் அவர்களை வாட்டி வதைத்திருக்கிறது. சிறுவர்கள், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### கா. யோகநாதன்

ஆலயத்திலிருந்து வரணி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள முகாமிற்கு புறப்பட்டோம்.

(தொடரும்)

**வடமராட்சி அகதிகள் — 5**

நிவாரணம் வழங்கப்பட்டுவிட்டது. இதனல் இவர்கள் சென்ற இடத்திலும் நிவாரணம் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

### தனியார் வீடுகளில்

ஆலயத்திலிருந்து வெளியேறிய குடும்பங்கள் பல தற்போது தனியார் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர் சில குடும்பங்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு, பூநகரிக்கும் சென்றுள்ளன.

### நிவாரணம் கிடைக்கவில்லை

யாழ். நகரில் எத்தனையோ பொது ஸ்தாபனங்களின் தலைமைப் பீடங்கள் இயங்குகின்றன. எதுவுமே இதுவரை இங்கு எட்டிப்பார்க்கவில்லை. அரச நிவாரணம் கூட சரிவர கிடைக்கவில்லை.

ஆலயத்தை சுற்றி அங்குமிங்குமாக நூற்றுக்கு மேற்பட்ட பானைகளில் உணவு தயாராகிகொண்டு இருந்தது. பசிக்களையினல் சிறுவர்கள், குழந்தைகள் அந்த அடுப்புக்களைச்சுற்றிவர நாடியில் கை வைத்தபடி காத்திருந்தனர் பெரியவர்கள், மர நிழல்களின் கீழிருந்து, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்கள் பற்றி பேசிக்கொண்டு இருந்தனர். அங்கு மிங்குமாக சில வண்டில்கள் காணப்பட்டன அருகில் மாடுகள் நின்றன வடமராட்சியிலிருந்து வரும்போது கொண்டு வந்திருக்க வேண்டும். இரண்டொரு நாய்கள் மட்டும் வீதியோரத்தில் படுத்திருந்தன. அவற்றின் கழுத்தில் கயிறு காணப்பட்டது அங்கு ஆடு மாடு கோழிகளுக்கு என்ன நடந்திருக்கும் என்பது எல்லோருக்கு தெரிந்த விஷயம் ஆனல் வீட்டிற்கு வீடு வளர்க்கப்பட்ட நாய். பூனைகள் ஆயிரத்திற்கு மேலிருக்கும். எப்படித்தான் தாக்குதல் நடந்தாலும், அப்பிராணிகள் வெளியேறுவதில்லை அப்பிராணிகள் பற்றியும் ஆலயத்தில் தங்கியிருந்த சிலர் கவலைப்பட்டார்கள்.

அங்கு ஒரே ஒரு கடை மட்டும்தான். சோடா, வெற்றிலை போன்ற சில்லறை சாமான்களுள்ள. கடை வாசலில் சிலர் நின்று சாமான்கள் வாங்கிக்கொண்டு இருந்தனர். கடைக்கு முன்னல் உள்ள மைதானம் ஒரே வெளி நண்கல் வேளை உச்சி வெய்யில். அதனல் அங்கு எவரையும் காணவில்லை.

ஆலயத்தின் பிற்பகுதியில் உள்ள அரங்கிலும் சிலர் படுத்திருந்தனர். அந்த வீதியெங்கும் மக்கள் போவதும் வருவதுமாக இருந்தனர்.

ஆலயத்தில் தங்கியுள்ள அகதிகள் மத்தியில் இப்பவும் பீதி குறையவில்லை, பயம் மறையவில்லை வீதியில் வரும் வாகன சத்தத்தை கேட்டா

### பென்சனர்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி]

வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தினல் இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கச்சேரி ஓய்வூதய பகுதிக் கணக்காளர் திரு. இராமச்சந்திரன் பென்சன் பகுதி உத்தியோகத்தர் திரு. எஸ். கந்தசாமி ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

## இன்றைய பலன்

மாதம்: ஆடி,
திகதி: 2 (18-7-87).
திதி: அட்டமி.
கிழமை: சனி.
நட்சத்திரம்: அஸ்வினி.

மேடம்: அவசரம் வேண்டாம், ஆயுத பீடைக்கு இடமுண்டு, நிதானத்துடன் செயற்படவும்.

இடபம்: சொற்சிலம்பம் ஆடுவதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள், டாக்டர்களுக்குப் பொன்னுள், குடும்பம் இன்று கலைக் கோயிலாக மாறும்.

மிதுனம்: வீணன சந்தேகங்களால் விவாதங்களேற்படும், இயந்திரங்களுடன் பழகுபவர் நிதானம்வேண்டும், தொழிலிலும் பொறுமை நன்று.

கடகம்: மாதுரு வழியால் நன்மையுண்டு, கடமையும் சிறக்கும், வாகன சுகமுமுண்டாம்.

சிங்கம்: புத்திரர்மூலம் ஆதரவு கிட்டும், புதிய தொழில் விருத்தியுண்டு. அந்நியர்மூலம் லாபம் கிடைக்கலாம்.

கன்னி: எதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும், வாழ்விலும் கொந்தளிப்பான நிலை தோன்றும், தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும.

துலாம்: தேடிய உறவு நாடியேவரும், குடும்பத்திலும் வசந்தம் நிலவும், புது மனை கட்டவும் ஆலோசிப்பீர்

விருச்சிகம்: தொல்லைகளாற் பாதிக்கப்படுவீர்கள், தொழில் வீழ்ச்சியுண்டு, உங்கள் விடயத்தில் இன்று உண்மையும் ஊமையாகிவிடும்.

தனுசு: பெரியோரைப் பேணுவதன்மூலம் பெரிய காரியங்களைச் சாதிப்பீர்கள் நீண்டநாட் பகை இன்று நிவர்த்தியாகும், கடமையிலும் ஆர்வம் பிறக்கும்.

மகரம்: தொழிற்துறையில் வெற்றி, விருந்தினர் வருகை மகிழ்ச்சி, பொன் பொருள் விருத்தியுண்டாம்.

கும்பம்: இலட்சியப் பாதையில் வீறுநடைபோடுவீர்கள், எதிர்பார்த்த பொருள் இன்று கிட்டும், பிறந்தகத்திலிருந்து பொருள் வரவும் ஏற்படலாம்.

மீனம்: தொழிலாளர் மத்தியில். வேற்றுமை தோன்றும், அரச பயத்திற்கு இடமுண்டு, வாழ்விலும் விரக்திதோன்றும்.

**திருமலை ரவீந்திரன்**

சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவில்——

## 526 அகதிக் குடும்பங்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்

[பண்டத்தரிப்பு நிருபர்]

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இம் மாதம் 8-ம், 9-ம், 10-ம் திகதிகளில் 21 அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள 526 குடும்பங்களைச் சேர்ந்த 2368 பேருக்கு இந்தியா அன்பளிப்புச் செய்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

பண்டத்தரிப்பு ஜெசிந்தாரே க வித்தியாலயம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, பெரியவிளான் சென். யூட்ஸ் தேவாலயம், சங்கானை நிற்சாமம் விக்கினேஸ்வரா வித்தியாலயம், மாரீசன்கூடல் புனித. கைத்தார் தேவாலயம், சண்டிலிப்பாய் த. க. பாடசாலை, நவாலி கொத்துக்கட்டி மணிமண்டபம் ஆகிய இடங்களில் வைத்து இந்த நிவாரணப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் மேற்பார்வையில் நடைபெற்ற இந்த நிவாரணப் பொருள்கள் வழங்கும் வைபவங்களில் பிரதம அதிதியாக இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. ஷாகால் கலந்துகொண்டு உணவுப் பொருள் விநியோகத்தை ஆரம்பித்த் வைத்தார். இதில் யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் திரு ந. கருணை ஆனந்தன், திரு கே. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் அவ்வப் பகுதி பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

வடமராட்சியிலிருந்து

## இடம்பெயர்ந்த 200 குடும்பம் கோண்டாவிலில் தஞ்சம்

உரும்பராய், வெள்ளி

வடமராட்சியில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கையினல் 200க்கும் அதிகமான குடும்பங்கள் கோண்டாவில் கிழக்கு கிராம சேவையாளர் பகுதியில் தங்கியுள்ளன.

இந்திய நிவாரண உதவிகளை பலபகுதிகளில் குடியேறிய வடமராட்சி மக்கள் பெற்ற போதிலும், இப்பகுதியில் தஞ்சமடைந்துள்ள வடமராட்சி மக்கள் இதுவரை இவற்றைப்பெற்றுக்கொள்ளவில்லை. தஞ்சமடைந்துள்ள மக்கள் ஒன்று சேர்ந்து முகாம்களில் இருந்தாலே இந்திய நிவாரணம் கிடைக்க முன்னுரிமை வழங்கப்படும் என அதிகாரிகள் கூறுகிருர்கள்.

இப்பகுதியில் குடியமர்ந்துள்ள அகதிகளை ஒன்று சேர்த்து ஒரே முகாமிலேயே வைத்துப் பராமரிப்பதற்கான ஒழுங்களை கோண்டாவில் கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு. எஸ். கனகலிங்கமும், சில பொது ஸ்தாபனங்களும் முயற்சிசெய்து வருகின்றன.

இதேவேளை இப்பகுதியில் 150க்கும் மேற்பட்ட நலன் விரும்பிகள் தமக்கு கிடைத்த அரசாங்க நிவாரண உதவிகளை பாதிப்படைந்த மக்களுக்கு வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

### லயன்ஸ் பதவியேற்பு வைபவம்

[பண்டத்தரிப்பு நிருபர்]

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாகசபை பதவியேற்கும் வருடாந்தவைபவம் இம்மாதம் 26ம் திகதி நடைபெறவுள்ளது

இதில் பிரதம அதிதியாகப் பிரதி மாவட்ட ஆளுநர் திரு. ரி. இராஜேந்திரா கலந்து கொண்டு பதவிப் பிரமாணத்தை நடாத்திவைப்பார்.

## தென்னிலங்கையில் சட்டவிரோத ஆயுத உற்பத்தி அதிகரிப்பு!

[கொழும்பு]

தென்னிலங்கையில் சட்ட விரோத ஆயுத உற்பத்தி பெருகி வருவதாக புலனுய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது பெரும் ஆதாயம் தரும் வியாபாரமாகவும் இப்பகுதியில் கருதப்பட்டு வருகிறதாம்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சாதாரண துப்பாக்கியொன்றின் சராசரி விலை 750 ரூபாவாக உயர்ந்துள்ளதாக இவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். முன்னர் 500 ரூபாவுக்கு இத்தகைய துப்பாக்கியொன்றை வாங்கிவிட முடியும்.

தென்னிலங்கையில் தீவிரமாக செயற்பட்டுவரும் அரசாங்க எதிர்ப்புச்சக்திகள் இத்தகைய துப்பாக்கிகளை அதிகளவில் பாவிக்கத் தொடங்கியிருப்பதனலேயே இவற்றின் விலை அதிகரித்துள்ளதாகக் கருதப்படுகிறது. அத்துடன் சட்டவிரோத ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையும் கடந்த சில மாதங்களில் அதிகரித்துள்ளதாக அரசுக்குத் தெரியவந்துள்ளதாம்.

பெரும்பாலும் காட்டுப் பகுதிகளிலேயே இந்தத் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. தங்காலை மாவட்டமே இத்தகைய தொழிற்சாலைகளை அதிகமாகக் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

(ஊ)

# ‘இங்குநடக்கும் சம்பவங்களை உரியஇடத்தில்தெரிவிப்போம்’

(பண்டத்தரிப்பு நிருபர்)

“இங்கு நடக்கும் சம்பவங்களை நாங்கள் நேரடியாகக் கண்டும், கேள்விப்பட்டும் இருக்கின்றோம். எங்கள் செஞ்சிலுவைச்சங்க விதிகளுக்கமைய இவற்றை உரியஇடத்தில் தெரிவிப்போம்”.

இவ்வாறு வட்டுக்கோட்டை கிழக்கு தாவளைசைவத்தமிழ்ப் பாடசாலையில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு இந்தியா அன்பளிப்பு செய்த உணவுப்பொருள்கள் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி திரு. மோகன் நாராயணன் குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டை பிரஜைகள் குழுத்தலைவர் என். சிவஞானம் இவ்வைபவத்திற்கு தலைமைவகித்து உரையாற்றுகையில்; தமது வீடுவாசல்களையும், சொத்துகளையும் இழந்து வருமானம் எதுவுமின்றி இங்கு தஞ்சமடைந்திருக்கும் அகதிகளின் நிர்கதியானநிலையில் இந்தியாவழங்கும் இந்த உணவுப் பொருள்கள் பேருதவியாக இருக்கின்றன என்றும், இது போன்ற உதவிகள் தொடரப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சித்தங்கேணி கணேச வித்தியாலய அதிபரும், முன்னாள் வட்டுகிழக்கு கிராமோதைய சபைத்தலைவருமான சைவப் புலவருமான நா. க. தங்கரத்தினம், வட்டுகிழக்கு ஆரம்ப சுகாதார அபிவிருத்திச் சபை செயலாளர் கி. வைரமுத்து, வட்டு பிரஜைகள் குழுவின் செயலாளர் அ. குலசூரியன், வட்டுக்கிழக்கு கிராமசேவை அலுவலர் ஆ. முருகேசு ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

## “இலங்கை – கனடா இளைஞர் பரிமாற்றுத்திட்டம்: 50 பேர் கனடா சென்றனர்

[கொழும்பு]

வருடாந்தம் நடைபெறும் இலங்கை-கனடா இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தின்கீழ் இம்முறையும் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் தேசிய இளைஞர்சேவைகள்மன்ற இளைஞர் கழகங்கள் நிஸ்கோ கூட்டுறவு உறுப்பினர்கள் ஆகியோரினூடாக தெரிவுசெய்யப்பட்ட 42 இளைஞர் யுவதிகளும், 8 இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்களும் கடந்த 11ம் திகதி கனடாநோக்கி பயணமாகி உள்ளனர்.

இவர்கள் கனடாவின் “நோவாஸ் கோசியா சக்கச்சுவான்” ஆகிய பிரதேசங்களில் மூன்று மாதகாலம் தங்கியிருந்து அப்பிரதேச மக்களின் சமூக, பொருளாதார, கலாசார அறிவினைப்பெறுவார்கள்.

இவ்வருடம் ஒக்டோபர் மாதம் இக்குழுவினர் இலங்கை திரும்பும்போது இவர்களுடன் கனேடிய இளைஞர்-யுவதிகள் 42 பேரும் இலங்கை வருவார்கள். இவர்கள் காலி, நுவரேலியா ஆகிய பிரதேசங்களில் 3 மாதகாலம் சமூக அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுவார்கள்.

வழமைபோல் இம்முறையும் வடக்கு-கிழக்கு, மலையகப் பிரதேசங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ், முஸ்லிம் இளைஞர்-யுவதிகளும் கலந்துகொள்கிறார்கள்என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கான சகல செலவுகளையும் கனடா உலக இளைஞர் அமையம் பொறுப்பேற்றுள்ளது.

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து அடுத்தமாதம் நடைபெறும் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களும் இவ்வாண்டு டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி சி. ஈ. சாதாரண வகுப்புக்குத் தோற்றும் மாணவர்களும் எதிர்நோக்கும் இடர்பாடுகள் தொடர்பான ஆலோசனைக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை சாவகச்சேரி றிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு இடம்பெயர்ந்த கல்லூரி அதிபர்கள், வட்டாரக் கல்வி அதிகாரிகள், பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகளின் பிரதிநிதிகள் மற்றும் பெற்றோர்கள் சமுகமளிக்கும்படி வடமராட்சி இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

## காத்தவன் காவியம்: ‘தமிழ் இலக்கியத்தில் தனி இடத்தைப் பெறும்’

யாழ்ப்பாணம், சனி

“தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சிறப்பாக தமிழ் காவிய வரலாற்றிலும், ஈழத்து தமிழ் இலக்கியவரலாற்றிலும்,கிறிஸ்தவ தமிழ் இலக்கிய வரலாற்றிலும் கவிஞர் தேவதாஸனது ‘காத்தவன் காவியம்’ ஓரிடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது.”

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ் யப்பான் நாட்டிலிருந்து அனுப்பி வைத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செய்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண கத்தோலிக்க இலக்கிய கழகத்தின் “காத்தவன் காவியம்” நூல் வெளியீட்டு விழா யாழ் மறைமாவட்ட தொடர்பு நிலைய மண்டபத்தில் நடைபெற்றபோது தெரிவிக்கப்பட்டது. இவ்வைபவத்திற்கு யாழ்.மறைமாவட்ட குழுத் தலைவர் அருட்திரு எஸ் கில்லர் ஜெபதேவன் அடிகளார் தலைமைதாங்கினார். புதியநூலை யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை வெளியிட்டு வைத்தார்.

அருட் திரு கிறிஸ்தி ஜெபநேசன் உரையாற்றுகையில்: “கத்தோலிக்க மதத்தை ஈழநாட்டில் காத்த யோசெவ்வாஸ் முனிவர் ‘புனிதர்’ நிலைக்கு திருநிலைப்படுத்தப்படுவதற்கு இந்நூல் ஒரு வகையில் பயன்படுத்தப்படுவதோடு அம்முனி மகான் விட்டுச் சென்ற இறைபணியை உலகறிய இக்காவியம் பெரிதும் உதவுமென நான் நம்புகிறேன்” என்றார்.

காரை சுந்தரம்பிள்ளை நூலை ஆய்வுரை செய்கையில் “கவிஞர் தேவதாசன் தன் காவியத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள் முன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நிகழ்வுகளையும் இக்கால நிகழ்ச்சிகளையும் ஒழுங்குசேர நோக்கக்கூடிய பொருத்தப்பாடுடையவைகளாகும் இவைகளை கவிஞர் தேவதாசன் இனங்கண்டு கவிதை வடிவில் வடித்தாலும் சிற்சில இடங்களில் குறைபாடுகள் உண்டு” என்றார்.

கலாநிதி மௌனகுரு ஆய்வுரை செய்கையில் “யோசெவ்வாஸ் அடிகள் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் இக்காவியத்தில் முன்னூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள் பண்பாடுகள், அக்கால நடைமுறைகள் எதனையும் காண முடியவில்லை இக்காவியம் முற்றிலும் சமய மேம்பாட்டை விளக்கும் காவியமாகவே பரிணமிக்கின்றது” என்றார்.

நூலாசிரியர் தேவதாஸன் உரையாற்றுகையில் “கவிதை என்பது உணர்ச்சியின் பிரவாகம் கட்டவிழ்ந்து துள்ளிவரும் சிந்தனைகள் தாளமும் சத்தமும் நிறைந்திருப்பது அதன் தனிச் சிறப்பு. இந்தவகையில் இக் காவியத்தை உருவாக்கித் தந்திருக்கிறேன்” என்றார். (கை)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

சித்த மருத்துவத் துறை திருநெல்வேலி யாழ்ப்பாணம்

1987-88ஆம் ஆண்டிற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவத் துறையின் பி எஸ். எம். எஸ் பட்டமாணிப் படிப்பிற்கான மாணவர்களைச் சேர்ப்பதற்கு பின்வரும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

தகைமைகள்:

(அ) 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் திகதியன்று 17 வயதிற்கு குறையாதவராக இருக்கவேண்டும்

(ஆ) 1985 ஆகஸ்ட் அல்லது 1986 ஆகஸ்ட் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இரசாயனவியல், பௌதிகவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

அனுமதி பற்றிய விபரங்களும், விண்ணப்பப்பத்திரமும் உதவிப் பதிவாளர் (தேர்வு) தேர்வுக் கிளை, அவர்களிடமிருந்து ரூபா 10ச் செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23X10 செ மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றைமுத்திரையிட்டு விலாசமிட்டு ரூபா 10க்கான காசுக் கட்டளையை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 28-8-1987.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், (ஏ 1931)


## அச்சுவேலி ம. வி. மாணவர் தொகை மீண்டும் அதிகரிப்பு

(அச்சுவேலி நிருபர்)

அச்சுவேலி மகாவித்தியாலயம் தொடர்ந்து செயற்படுகின்றது. கடந்த 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகாவித்தியாலயத்தின் மீது நிகழ்ந்த விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலையடுத்து அடுத்த நாள்திங்கட்கிழமைமாணவர்வரவுமிகக் குறைவாக இருந்த போதிலும் இப்பொழுது மாணவர் தொகை அதிகரித்து வருகின்றது. சகல வகுப்புகளும் ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன.

## வடமராட்சி மக்களுக்கு புத்தூர், ஆவரங்காலில் தங்குமிட வசதிகள்

(அச்சுவேலி நிருபர்)

வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்துவரும் மக்களுக்கு புத்தூர், ஆவரங்கால் பகுதியில் தங்குமிடவசதி தாராளமாகவழங்கப்படுகின்றது. இவர்கள் தங்குவதற்கென பல நிலையங்கள் புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

ஆவரங்கால்நடராசா இராமலிங்கம் மகாவித்தியாலயம், ஆவரங்கால் மகாஜனவித்தி (8ம் பக்கம் பார்க்க)

## தகவல் தாருங்கள்

கைதடி மேற்கில் வசிக்கும் வா. முருகையா (மந்திகை ஆஸ்பத்திரி ஊழியர்) கடந்த 4-ம் திகதி மந்திகை ஆஸ்பத்திரிக்கு கடமைக்கெனச் சென்றவர் இதுவரை வீடுதிரும்பவில்லை

இவரைப்பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ் காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**தலைவர்,**
சரஸ்வதி சனசமூக நிலையம், கைதடி மேற்கு,
கைதடி.

★

வல்லிபுரக் குறிச்சியை வதிவிடமாகக்கொண்ட எனது சகோதரி வள்ளிப்பிள்ளை அவரது மகள், மூத்தமகன் சத்தியமூர்த்தி ஆகியோர் இடம்பெயர்ந்து எங்கு இருக்கிறார்கள் என்பது தெரியவில்லை. எனவே இவர்கள் குறித்த தகவல்களை பின்வரும் முகவரிக்கு அறியத் தாருங்கள்.

**வே. பரமநாதன்.**
ஊரெழு வடக்கு,
சுன்னாகம்.

★

கரவெட்டி, யார்க்கரு வீதியைச்சேர்ந்த திருமதி இளையதம்பி சின்னம்மா, திரு., திருமதி இளையதம்பி சிவராஜா, திரு., திருமதி செல்லையா ஆகியவர்களைப் பற்றிய தகவல்களை அறியமுடியாமல் இருக்கிறது. விபரம் தெரிந்தவர்கள் பின்வரும் முகவரிக்கு அறியத்தரவும்

**திரு.வெ.பூபாலசிங்கம்,**
மருந்தகம்,
உருப்பராய்.


வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி!

BATA

SHOW ROOM

இல. 19 & 20 நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

எங்கள் கிளை ஸ்தாபனம் ஒன்று பின்வரும் விலாசத்தில் திறக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

Bata Show Room

இல. 3, செட்டித் தெரு ஒழுங்கை,
(கைலாசபிள்ளையார் கோவில் அருகாமை)
நல்லூர், யாழ்ப்பாணம்

(நேரம் காலை 9-00 மணிமுதல் இரவு 8-00 மணிவரை.)

எங்கள் ஸ்தாபனத்திற்கு வேறு கிளைகள் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

MANAGED BY

BATA | SHOE Co. OF CEYLON LTD.
COLOMBO. (A 1932)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 18-7-87

## வெல்லமுடியாத யுத்தமொன்றுக்கு

# அதிக நிதி ஒதுக்குவதால் நாட்டின் அபிவிருத்திபெரிதும்பாதிப்படைகிறது

[கொழும்பு]

''வெல்லமுடியாத யுத்தம் ஒன்றிற்கு அதிக நிதியை ஒதுக்குவதால் நாட்டின் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படுகிறது. தேசிய பாதுகாப்பு அமைச்சரோ பெருமளவு நிதியைக் கோருகிறார். இந்நிலையில் அபிவிருத்திக்கு நாம் என்ன செய்வது''

இவ்வாறு பாரிஸில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் கலந்து கொண்டு நாடு திருப்பிய நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் பத்திரிகையாளரிடம் அங்கலாய்த்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:-

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இங்கு சமாதானம் ஏற்படுவதையே வுரும்புகின்றன. ஆனால் நிலைமை மோசமடைந்தே வருகிறது. நாட்டின் அபிவிருத்திக்கு நிதி உதவுமாறு எம். பி.க்கள் சேட்கிறார்கள். ஆனல் பெருமளவு நிதியோ தேசிய பாதுகாப்பிற்கு ஒதுக்கவேண்டியுள்ளது.

வெல்லமுடியாத இந்த யுத்தத்தைத் தவிர்த்து அடுத்த தேர்தலுக்காவது அபிவிருத்தியைக் கவனத்தில் கொண்டு வேலைசெய்ய வேண்டும். இதனையே நான் ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும், பந்தோபஸ்து அமைச்சரிடமும் வற்புறுத்தியுள்ளேன்.

நாட்டில் சமாதானம் விரைவில் ஏற்பட்டால் எமக்கு உதவித் தொகையை அதிகரிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள். இம்முறையும் இதனையே அவர்கள் பெரிதும் வற்புறுத்தினார்கள். பிரச்னை தீர்க்கப்பட்டிருந்தால் கிடைத்த தொகை இரண்டு மடங்காகியிருக்கும்.

இலங்கையில் தொடரும் இனப்பிரச்னைக்குத் தமிழர்கள் சர்வதேச மன்னிப்புச் சபை. சர்வதேச அலேட் நிறுவனம் மாத்திரமன்றிச் சிங்கள மக்கள் பெருமளவில் பாரிஸில் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

நோர்வேயில்சமாதானஆய்வு நிறுவனத்தில் கடமையாற்றும் இலங்கையரான திரு. குமார் ரூபசிங்க தலைமையில் பெருமளவு சிங்களவர், இலங்கையில் தமிழருக்கெதிரான வன்முறையை நிறுத்துமாறுகோரி பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பல பிரசார நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

பல நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்குவதை முற்றாக நிறுத்தவேண்டுமென்று பிரேரணைகளையும் முன்வைத்தன. இப்பிரேரணைகள் மாநாட்டில் கலந்து கொண்ட நோர்வேப் பிரதிநிதி ஊடாகத் தனக்குச் சமர்ப்பிக்கப்பட்டதென்றும் கூறினார். [சி]

## இவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

(மாவிட்டபுரம் நிருபர்)

மயிலிட்டியைச்சேர்ந்த 1250 அங்கத்தவர்களைக் கொண்ட 141 குடும்பங்களுக்கு எவ்வித அரச நிவாரணமும் கிடைக்கவில்லையெனமயிலிட்டிசெல்வா சனசமூக நிலையம் யாழ் அரச அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது.

இக்குடும்பங்களுக்கு உடனடியாகநிவாரணம் வழங்கஆவன செய்யுமாறும் மேற்படி நிலையம் கோரியுள்ளது.

## வடமராட்சி

[7ம் பக்கத் தொடர்ச்சி]

யாலயம், புத்தூர் மெதடிஸ் மிசன் தமிழ்க்கலவன்பாடசாலை, புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம், புத்தூர் ஆச்சிரமம், புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தாகல்லூரி, புத்தூர்ஸ்ரீபஞ்சசீக வித்தியாலயம், சிறுப்பிட்டி சைவத்தமிழ் வித்தியாலயம், சிறுப்பிட்டிவெங்காயச் சங்கம் என்பவற்றில் தங்குவதற்கு ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

## பொது அறிவு போட்டி

யாழ்ப்பாணம், சனி.

தமிழர் கலாசார அவை சனசமூக நிலையங்களுக்கிடையே பொது அறிவுப்போட்டியொன்றினை விரைவில் நடத்தவுள்ளது.

இப்போட்டியில் அரசியல், அடிப்படை விஞ்ஞானம் பொது அறிவு ஆகிய துறைகளை உளளடக்கியே கேள்விகள் கேட்கப்படும்.

இப்போட்டியில் கலந்து கொள்பவர்கள் இருபது வயதிற்குட்பட்டவராக இருப்பதுடன்இம்மாதம் 31ம்திகதிக்கு முன் தமது விண்ணப்பத்தினை தமிழர் கலாச்சார அவையிடம் சமர்பிக்கவேண்டும் என கோரப்பட்டுள்ளது.

## பேராதனை, தும்பறை

# பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன

(கொழும்பு:

பேராதனை, தும்பறை பல்கலைக்கழக சகல பீடங்களும் நேற்று மூன்தினம் முதல் காலவரையறையின்றி மூடப்பட்டன. விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சிறைக்கூடங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்யுமாறும், வடகொழும்பு தனியார் மருத்துவ கல்லூரிக்கு தனியான பரீட்சை நடத்தக் கோரியும் மேற்படி பல்கலைகழகமாணவர்கள் வகுப்புகளை பகிஸ்கரித்து வந்தனர்

இதனையடுத்தே இவை காலவரையறையின்றி மூடப்பட்டன. ஜே.வி.பி யுடன் தொடர்புடையவர்களென்ற சந்தேகத்தின் பேரில் சுமார் 120 பட்டதாரிமாணவர்கள் தற்போது தடுப்புக்காவலிலுள்ளனர். (சி)

## 8 வாக்களிப்பு நிலையங்கள்

[வவனியா நிருபர்]

வவனியா தெற்கு சிங்களப் பிரிவு பிரதேச சபைக்கு இப் பகுதி பொதுமக்கள் வாக்களிப்பதற்காக ஆறு அரசினர் பாடசாலைகளில் எட்டு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக வவனியா உதவி தேர்தல் ஆணையாளர் திரு வி. சண்முகம் தெரிவித்தார்.

மடுக்கந்த ஈரற்பெரியகுளம் மருதமடுவ, பெரிய உலுக்குளம், மகாகச்சக்கொடி,மாமடுவ ஆகிய இடங்களில் வாக்களிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்தலுக்கு திஸ்ஸ குணசேகர தலைமையிலான குழு ஒன்றும் விமலநாத் தலைமையிலான குழு ஒன்றும் போட்டியிடுகின்றது.

இரு குழுக்களும் சுயேச்சை அபேட்சகர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தெற்கு சிங்கள பிரிவு பிரதேசசபை இத்தேர்தலுக்கு 7671 பேர் வாக்களிக்க தகுதியுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டது.

## வடமராட்சி பகுதி

# தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மாற்றுஇடம் இல்லையாம்

யாழ்ப்பாணம், சனி

வடமராட்சிப் பகுதியில் க. பொ. த (உயர்தர) பரீட்சைக்குத்தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில்தான் பரீட்சைக்கு தோற்றவேண்டுமென்று யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

க. பொ த. உயர்தர பரீட்சைக்கு இம்முறை ஆயிரத்தி அறுநூற்றியேழு பரீட்சார்த்திகள் தோற்றுவதாகவும் இவர்களில் ஐநூற்றி அறுபத்தேழு மாணவர்கள் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக இருக்கிறார்கள் என்றும் வடமராட்சியிலுள்ள பாடசாலை பரீட்சார்த்திகளுக்குமட்டுமே யாழ் மாவட்டத்திலுள்ள வேறு பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒன்பது க. பொ. த. (உயர்தர) பரீட்சை நிலையங்கள் வடமராட்சியில் அமைக்கப்பட்டிருந்ததாகவும் இப்பரீட்சை நிலையங்கள் சில இப்பொழுது இயங்கமுடியாமலிருப்பதால் அவை வடமராட்சியிலுள்ள வேறு பாடசாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ளனவென்றும் தெரிகின்றது.

நெல்லியடி மத்தி மகாவித்தியாலயம், புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் மகளிர் பாடசாலை ஆகியவற்றில் அமைக்கப்பட்டிருந் பரீட்சை நிலையங்கள் தற்போது இயங்க முடியாமலிருப்பதால் இவை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, திரு இருதயக்கல்லூரி, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் ஆகியவற்றிற்கு மாற்றப்பட்டுள்ளன. (ஓ)

## அரசு காலக்கெடு

(கொழும்பு)

அரசாங்கம் விரைவில் அறிவிக்கவிருக்கும் காலக்கெடுவுக்கு முன்பதாக வேலை நிறுத்தில் ஈடுபட்டுள்ள சகல வைத்தியர்களும் வேலைக்குத் திரும்ப வேண்டுமென்றும் அப்படிச் செல்பவர்களின் கடந்தகால சேவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## ஒரே குடும்பத்தில் ஐவருக்கு மரண தண்டனை

[கொழும்பு]

களுத்துறையில் ஒரே குடுபத்தை சேர்ந்த ஐந்து பேருக்கு ஜூரி சபையின் உயர் நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது.

1983ல் ஒருவரை வாளால் வெட்டிக்கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டே இந்த சிங்களக் குடும்பத்தினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. சாட்சிகள் மூலம் குற்றம் ஊர்ஜிதமானதையடுத்து ஜூரி சபையின் ஏகோபித்த முடிவுக்கமைய நீதிபதி திரு. பி.டி. எஸ். குணசேகரா ஐவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## மரண அறிவித்தல்


### திருமதி கமலாவதி இராமநாதர்

நல்லூரரைச் சேர்ந்த திருமதி கமலாவதி இராமநாதர் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராமநாதர் (நில அளவை உதவி அத்தியட்சர்) அவர்களின் அன்பு மனைவியும், Dr. குமுதினி [யாழ் அரசினர் வைத்தியசாலை, Dr. சிறீதரா (அமெரிக்கா], Dr நளாயினி (யாழ். அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும், Dr. குலசேகரம் (தேயிலை ஆராய்ச்சி நிலையம் தலவாக்கொல்லை), Dr. அனுஷ்யா [அமெரிக்கா), ஞானதேவன் [கொழும்பு வர்த்தக கம்பனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியதர்சினி, ஸ்கந்தராஜ். மேனகா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து 18-7-87 (இன்று) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இல: 312, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(சி-9901)

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னபூரணம் சோமசுந்தரம் B.A.(Cey)

ஓய்வுபெற்ற ஆசிரியை யாழ்/ கனகரத்தினம் ம. ம. வி.

மண்ணில்: 1-9-1923 மலரடியில்: 5-7-1987

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காக விளங்கிய அன்புத்தெய்வம் 5-7-1987 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அவரது இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடந்தேறின என்பதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தகவல்:

அ. சோமசுந்தரம்
(சங்கீதபூஷணம்)

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

[சி-9911)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036 81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.